மணவை முஸ்தபா

# விழா தந்த விழிப்பு



௭

# விழா தந்த விழிப்பு

(சிறுவர் புதினம்)

*ஆசிரியர் :*

**மணவை முஸ்தபா**

விலை ரூ.20/-

**மீரா பப்ளிகேஷன்**

AE -103, அண்ணா நகர்,

சென்னை - 600 040.

# VIZHA THANTHA VIZHIPPU

(Awakening by a Function)

(Childrens' Novel)

*Author :*

MANAVAI MUSTAFA

Price : Rs.20/-

MEERAA PUBLICATION

AE-103, Anna Nagar,

Chennai - 600 040.

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | - | Vizha Thantha Vizhippu |
| Author | - | Manavai Mustafa |
| Language | - | Tamil |
| First Edition | - | January 1989 |
| Revised Edition | - | December 1997 |
| Copyright Holder | - | Manavai Mustafa |
| Paper used | - | 11.6 kg. J.K. Maplitho |
| Size of the book | - | Crown Octavo |
| Printing points used | - | 14 points |
| No. of pages | - | 104 pages |
| Laser Typesetting | - | Laser Impression<br>12-B/4, Pulla Avenue,<br>Shenoy Nagar, Chennai-30. |
| Printed at | : | Emerald Printing House<br>17, West Arasamaram St.,<br>Aminjikarai, Chennai - 29. |
| Binding | : | Paper Back |
| Price | : | Rs.20/- |
| Publishing House | : | Meeraa Publication<br>AE-103, Anna Nagar,<br>Chennai - 600 040. |

# முன்னுரை

சிறுவர்க்கான சிறந்த நூல்கள் தமிழில் பெரும ளவில் வெளிவராதது பெருங்குறையாகவே உள்ளது. மேனாடுகளில் சிறுவர் நூல்களுக்கு மிகுந்த முக்கி யத்துவம் அளிக்கப்படுகிறது. அதனால் அங்கெல்லாம் வளர்ச்சி விகிதமும் அதிகமாகவே இருக்கிறது.

இன்றைய சிறுவர்களே நாளைய பெரியவர்கள். நாட்டின் நாளை வளர்ச்சியும் வலிமையும் அவர் களைப் பொருத்தே அமைய முடியும். எனவே, இன்றையச் சிறுவர்களின் சிந்தனைக்கு உரமூட்டும் சிறந்த நூல்கள் பெருமளவில் வெளிவர வேண்டும். அந்நூல்கள் அவர்களின் அறிவு வளர்ச்சிக்கும் மன பண் பாட்டு வள ·சிக்கும் அடித்தளமாக அமைய வேண்டு வது அவசியம்.

அந்த உணர்வில்தான் இந்நூல் எழுதப்பட்டுள் ளது. சேமிப்புப் பழக்கமும் சிக்கன உணர்வும் இளம் வயது முதலே ஏற்படவேண்டிய ஒன்று. அதன் அவசி யத்தையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் காரண காரியங்களோடு உணரச் செய்வது அவசியம். அவ் வகையில் சிறுவன் அறிவானந்தம் மூலம் சிறு சேமிப்பின் முக்கியத்துவம் இக்கதையின் மூலம் நன்கு விளக்கப்படுகிறது.

*இக்கதையின் நாடக வடிவம் சில ஆண்டுகட்கு முன்னர் அனைத்திந்திய வானொலி, சென்னை நிலைய சிறுவர் நாடக விழாவில் 'விழா தந்த விழிப்பு' என்ற பெயரிலேயே ஒலிப்பரப்பாகியது. சிறுவர்க் கேற்ற பயனுள்ள கருத்துக்களை, குறிப்பாக சிறு சேமிப்புச் சிந்தனையை ஊட்டிய இந்நாடகத்தைப் பலரும் பாராட்டினர். நூலாக வெளியிட வேண்டு மென அன்பர் பலர் வலியுறுத்தினர். அவர்தம் விருப் பத்திற்கிணங்க நூலுருப் பெற்று இன்று உங்கள் கரங்களில் தவழ்கிறது.*

*சிறுவர் நாடக விழாவில் சிறப்பு நாடகமாக ஒலி பரப்பிய வானொலி நிலையத்தாருக்கு என் நன்றி.*

*தரமான நல்ல நூல்களை வெளியிட்டு வரும் 'மீரா பப்ளிகேஷன்' பதிப்பகத்தாரின் வெளியீடாக இந்நூல் வெளி வந்தது. இப்போது திருத்திய இரண் டாம் பதிப்பாக வெளிவருகிறது. எனது மற்ற நூல் களைப் போன்றே இந்நூலையும் வாசகர்கள் ஆதரித்து ஊக்குவிப்பார்கள் என நம்புகிறேன்.*

*அன்பன்*

**மணவை முஸ்தபா**

*ஆசிரியர்.*

# ஆய்வுரை

''பெரியவர்களுக்காக நாவல் எழுதுகிறவர்கள், சிறுவர்களுக்கும் சில நாவல்கள் எழுதலாமே என்று எழுதுவதில்லை. பெரியவர்களுக்காக நாடகம் எழுது பவர்கள் சிறுவர்களுக்கும் சில நாடகங்கள் எழுத லாமே என்று எழுதுவதில்லை. பெரியவர்களுக்குக் கட்டுரை எழுதுபவர்கள் சிறுவர்களுக்காகச் சில கட்டு ரைகள் எழுதலாமே என்று எழுதுவதில்லை. ஆனால், பெரியவர்களுக்காகக் கவிதை எழுதுபவர்கள், சிறுவர்க ளுக்காகச் சில கவிதைகள் எழுதுகிறார்கள். பிள்ளைக ளிடம் இரங்கும் கருணை உள்ளம் கவிஞர்களிடமே உள்ளது பிள்ளைகளே நாளைய பிரபஞ்சதை வாழ் விக்கப் போகிறவர்கள் எனும் உண்மையை உணர்ந்த வர்கள். அதனால்தான் பாரதியார், பாரதிதாசன், கவி மணி, வாணிதாசன், தமிழ் ஒளி முதலிய கவிஞர் பெரு மக்கள் பெரியோர்க்காக கவிதை புனைந்ததுடன் சிறி யோர்க்காகவும் கவிதைகள் புனைந்தார்.''

மேலே கண்டது பாவேந்தர் நூற்றாண்டு விழா வை ஒட்டி குமரி அனந்தன் ஓராண்டு நடத்திய பாவேந்தர் தொடர்ச் சொற்பொழிவுகளில் ஒரு வாரம் நான் பங்கு கொண்டபோது கூறிய கருத்து. இக் கருத்தைப் பொய்யாக்குவதற்காகவே ஒருவர் பிறந்தி ருக்கிறார் என்பதை அப்போது நான் உணரவில்லை. அவர்தான் மண்ணகம் முழுதும் அறிந்து போற்றும் 'அறிவியல் தமிழ் வித்தகர்' மணவை முஸ்தபா அவர்கள்.

மணவையார் 1965இல் தென்மொழிகள் புத்தக டிரஸ்டில் பணியாற்றிய காலம் முதலே எனக்கு நன்கு அறிமுகமானவர். அதிலும் ஆற்றலும் அறிவியல் தமிழார்வமும் பொங்கிப் பெருகும் கங்கையைப் போன்ற மணவையார் நான் மேல சொன்ன கருத்தை உடைத்து விதிக்கு ஒரு விலக்கு உண்டாக்கி விட்டார். மணவையார் கவிஞரல்லர்; ஆனால் சிறுவர்களிடம் பேரன்பும் அக்கறையும் கவிஞர்களுக்கே உண்டு என்று நான் கூறினேனே, அதைக் காட்டிலும் அதிக அன்பும் அக்கறையும் கொண்டவர். இனி இந்த நாட்டை ஆளப் பிறந்த அரும்புகளுக்கு, அவர் ஆற்றிய தொண்டு பெரிது. குழந்தை எழுத்தாளர் என்னும் பட்டம் சூட்டிக் கொண்ட ஒருவர் சராசரியாக ஆற்றும் சிறுவர் இலக்கியத் தொண்டைவிட அதிகம்! மிக அதிகம்!

மணவையார் முதலில் ஓர் அறிவியல்வாதி! அனைத்து அறிவியல் மூலங்களையும் கூறுகளையும் அன்னை தமிழில் அளிக்க முடியும் என்று சொல்லி, சொல்லியதைச் செயல்படுத்தி, அச்செயலில் மிகப் பெரிய வெற்றி பெற்றவர். மொழி பெயர்ப்புக் கலையின் முடிசூடா மன்னர். அப்படிப்பட்டவர் தனது 'விசுவரூப' உருவை குறைத்துக் கொண்டு - மறைத்துக் கொண்டு, ஆயர்கள் மத்தியில் ஆநிறை மேய்த்த மாயக் கண்ணன் போல எளிய வடிவம் எடுத்துக் கொண்டார். ஆம், குழந்தை எழுத்தாளரானார். அவர் எழுதியவற்றைப் படித்துப் பார்த்தால், குழந்தை இலக்கியக் கோமான் ஆனார் என்று சொல்வதே பொருந்தும் தென்மொழிகள் புத்தக டிரஸ்டுக்காக நாற்பத்தி மூன்று

சிறுவர் நூல்களை மணவையார் பதிப்பித்தார். குழந்தை இலக்கிய விற்பனைகளில் எத்தனை பேருக்கு இந்த அரிய வாய்ப்புக் கிடைத்திருக்கும்? அவர்களின் எண்ணிக்கை இரு கை விரல் எண்ணிக்கை அளவு இருக்கலாம்! மணவையார் பதிப்பாசிரியர் மட்டுமா? படைப்பாசிரியரும் கூட! சிறுவர்களுக்காகச் சிறுகதை கள், நாவல்கள், நாடகங்கள், உரைச்சித்திரங்கள் முதலி யன எழுதியுள்ளார். கால் நூற்றாண்டுக் காலத்துக்கு மேலாக வானொலியில் சிறுவர் நிகழ்ச்சிகளை வழங்கி யுள்ளார். இவற்றை நூல்களாகவும் வெளியிட்டுள்ளார். இவற்றைப் பார்க்கும் போது, படிக்கும் போது மணவை முஸ்தபா குழந்தை இலக்கியக் கோமான் என்பது உண்மையாகிறது! உறுதிப்படுகிறது!

மணவையாரின் சிறுவர் இலக்கியச் சேவையின் ஒரு பகுதியாக ''விழா தந்த விழிப்பு'' புனை கதையை இங்கே ஆய்ந்து பார்க்க விரும்புகிறேன்.

''விழா தந்த விழிப்பு'' நாவலின் கதையைக் சுருக்கமாக அறிவோம்.

சிங்காரம் எனும் மாணவன், ஒரு மாணவனுக்குத் தேவையான நல்ல குணங்கள் எதுவுமே இல்லாதவன். அவனுக்குப் பணம் கிடைக்கும். அதனால் எப்போதும் சிற்றுண்டி வாங்கித் தின்று கொண்டே இருப்பான்.

அறிவானந்தம் என்று மற்றொரு மாணவன். அவன் உள்ளம் நல்ல பண்புகளின் இல்லம். ஆனால், ஏழை. தாயார் பலகாரம் சுட்டு விற்பவர். அவளுக்கு உதவியாக, பலகாரங்களைக் கடைகளுக்கு எடுத்துச்

சென்று, அங்கே கொடுத்து முடித்த பின்னரே பள்ளிக்குப் போக முடியும். அதனால் தினமும் பள்ளி தொடங்கிய பின்னரே, கால தாமதமாக வகுப்புக்கு வருபவன். அதற்காக ஆசிரியர் தரும் தண்டனையைப் பெறுவான். ஆனாலும் எல்லாப் பாடங்களிலும் முத லிடம் பெறும் புத்திசாலி; கெட்டிக்காரன். பாடம் தவிர, சேமிப்பு, கட்டுரைப் போட்டி முதலியவற் றிலும் கெட்டிக்காரன். அதனால் அவனை முருகு முத லிய மாணவர்கள் விரும்புகிறார்கள். புகழ்கிறார்கள்.

அறிவானந்தம் பெறும் புகழைப் பொறுத்துக் கொள்ள முடியாத சிங்காரம் எப்படியாவது, எதிலா வது அவனை வென்று புகழ்பெற விரும்புகிறான்.

சிங்காரம் எதிர்பார்த்த சந்தர்ப்பம் வருகிறது. அறி வானந்தம் தனக்குக் கிடைக்கும் சிறு தொகையையும் சேமிப்பில் போட்டுச் சேர்த்து வந்தான். சேமிப்பில் அவனுக்கு முதலிடம்.

திடீரென்று அவன் தாயாருக்கு உடல் நலம் குறைந்து நோயுற்று மருத்துவ மனையில் இருந்தார். அப்போது அறிவானந்தம் சேமித்த பணம் உதவியது. அதைக் கொண்டே மருந்து வாங்கினான். டாக்டர் நாதன் அவனது சேமிக்கும் பண்பைப் பாராட்டுகிறார். பள்ளியில் நடக்கும் சேமிப்பு விழாவில் ஒரு பேச்சுப் போட்டி நடக்கவிருந்தது. அதற்குரிய பேச்சை அவன் எழுதி வைத்திருந்தான். டாக்டர் நாதன் அதை வாங்கிப் படித்துப் பார்த்துப் பாராட்டுகிறார். ஆனால், 'அறிவா னந்தம்! எப்போதும் தாயருக்கு அருகே இருந்து கவ

ளித்துக் கொள்ள வேண்டும். வேறெங்கும் செல்லக் கூடாது' என்கிறார். அதனால் பேச்சுப் போட்டிக்குப் பெயர் கொடுத்திருந்தும் அதற்குரிய பேச்சைத் தயார் செய்திருந்தும், அறிவானந்தம் பள்ளி விழாவில் கலந்து கொள்ள முடியாத நிலை எற்பட்டது.

அறிவானந்தம் போட்டியில் கலந்து கொள்ள மாட்டான் என்பதை அறிந்து சிங்காரம் மகிழ்கிறான். அறிவானந்தம் இம்முறை பரிசு பெற மாட்டான் என்பதே மகிழ்ச்சிக்குக் காரணம். சிங்காரம் இதோடு நிற்காமல் அந்தப் பரிசைத் தான்பெற விரும்புகிறான். மருத்துவ மனைக்குச் சென்று அறிவானந்தத்தைச் சந்திக்கும் சாக்கில், அவன் தயார் செய்த சேமிப்புப் பேச்சினைத் திருடிக் கொண்டு வந்து விடுகிறான்.

சிறு சேமிப்பு விழா நடக்கிறது. விழாவின் தலைவர் டாக்டர் நாதன். சிங்காரம், அறிவானந்தம் தயாரித்த பேச்சைத் தன் பேச்சாகப் பேசிக் கைதட்டல் பெறுகிறான்.

இறுதியாக டாக்டர். நாதன் பேசுகிறார். சிங்கா ரத்தின் பேச்சு, அறிவானந்தம் தயாரித்தது என்பதை உணர்ந்தவர் அவர். அதைத்தான் அவர் மருத்துவமனை யிலேயே படித்திருக்கிறாரே. அதனால், சிங்காரத்தின் பேச்சு அறிவானந்தம் எழுதியது' என்பதைக் சொல் கிறார். ''அறிவானந்தம் தயாரித்த பேச்சே போட்டியில் முதல் பரிசு பெறுகிறது'' என்றும் அறிவிக்கிறார்.

அப்போதுதான் சிங்காரம் தன் தவறுகளை உணர் கிறான். அறிவானந்தம் எழுதிய பேச்சுக்காகத் தனக்குப்

பரிசளிக்கப்பட்ட புத்தகங்களை அறிவானந்தத்திடம் சேர்த்து, மன்னிப்புக் கேட்கிறான். தீய வழியில் சென்ற சிங்காரம் சிறு சேமிப்பு விழாவில் விழிப்படைந்து திருந்தி தூயவனாகி விடுகிறான்.

இதுவே கதை

இக்கதையில் சேமிக்கும் பழக்கத்தின் சிறப்பும் சிக்கன உணர்வின் தேவையும் உயிர் நாடியாக விளங்கு கின்றன. இளம் வயதிலேயே இந்தப் பண்புகளைப் பெற வேண்டிய அவசியத்தை இந்த நாவல் சொல் கிறது.

சேமிப்பின் சிறப்பு என்ன?

''மனிதனைவிட குறைந்த அறிவு படைத்த உயிரி னங்களெல்லாம் தவறாமல் சேமித்து வைத்துப் பயன டைகின்றன. மழைக் காலத்துக்கு வேண்டும் என்று வெயில் காலத்தில் இரையைத் தேடிச் சேமிக்கின்றது எறும்பு. அதேபோல் தேனீ, தேனைச் சேர்த்து வைத்துப் பயனடைகின்றது. ஆனால் ஆறறிவு படைத்த மனிதன் மட்டும் சம்பாதிக்கும் காலத்தில், வருங்காலத்திற்கு வேண்டுமே எனச் சேமிப்பதில்லை. வருமானம் இல் லாத வயதான காலத்தில் தடி ஊன்றித் தள்ளாடும் பரு வத்தில் அமைதியோடும் மகிழ்ச்சியோடும் வாழ வழி யின்றி வருந்தி நிற்கிறான். எதிர்கால வாழ்க்கையை எண்ணிப் பார்ப்பதில்லை. இளமையில் சேமிப்பு உணர்வு இருப்பதில்லை. ஆடம்பரமாக வாழ்ந்து விட்டு முதிய வயதில் கையேந்திப் பிச்சை கேட்கும்

கேவல நிலைக்கு ஆளாகிறான். அந்த நிலை ஏற்படாமல் இருக்க நாமெல்லாம் இளம் வயதிலிருந்தே - இன்று முதலே சிறுகச் சிறுக சேமிக்க வேண்டும்.'' *(பக்கம் 60-61)*

இது சிறுவன் அறிவானந்தம் தயாரித்து, சிங்காரம் பேசிய பேச்சின் ஒரு பகுதி.

''விழா தந்த விழிப்பு'' கதை நூலைப் படிப்பவர் மனதில் ஒரு புள்ளி விவரம் ஆழமாகப் பதியும். மேற்கோள் பதியலாம்! மேலான நிகழ்ச்சி பதியலாம்! நகைச்சுவைத் துணுக்குப் பதியலாம்! ஒரு புள்ளி விவரம் பதியுமா?

பதியும்!

இதை, அப்புள்ளி விவரத்தைப் படிக்கும் எவரும் ஒப்புக் கொள்வர்.

சிறு சேமிப்பு விழாவின் தலைவரான டாக்டர். நாதன் தனது பேச்சில் ''போட்டியில் இங்கு பேசிய எல்லா மாணவர்களுமே சிறு சேமிப்புப் பற்றி வெகு அழகாகப் பேசினார்கள். சிறு துளி பெரு வெள்ளமாவதுபோல், சின்னஞ்சிறு சேமிப்புக்கூட நாளடைவில் பெருந்தொகையாக உருவெடுக்க முடியும்.

''பாரதப் பிரதமராக இருந்த அமரர் லால்பகதூர் சாஸ்திரி அவர்கள். வீட்டு நலனுக்காகவும் நாட்டு நலனுக்காகவும் ஒவ்வொரு இந்தியனும் 3 பைசா நாள் தோறும் சேமிக்க வேண்டும். என்றார். அப்படிச் சேமித்தால் என்ன ஆகும்?

*''ஒவ்வொரு இந்தியனும் ஒரு நாளைக்கு 3 பைசா வீதம் சேமித்தால் 65 கோடி இந்தியரின் சேமிப்பு 195 கோடி காசுகள் ஆகும். 30 நாட்களுக்குச் சேமித்தால் 5,830 கோடி காசுகள் ஆகும். 12 மாதங்களில் அதாவது நாளைக்கு 3 காசு வீதம் சேமித்தால் ஆண்டில் சுமார் 700 கோடி ரூபாய்கள் சேமிக்கப்படும்.'' (பக்கம் 93-94)*

இந்தப் புள்ளி விவரம் பனித்துளி போலத் தொடங்கும் சேமிப்பு, பனிமலை இமயமாக எழுந்து உயர்ந்து உறுதியாய் நிற்கும் உண்மையை எவ்வளவு அழுத்தமாகக் கூறுகிறது! எல்லா எண்களும் நம் கவனத்தில் நிலைக்காவிட்டாலும், 65 கோடி இந்தியர்கள் ஒவ்வொருவரும் நாளுக்கு 3 காசு வீதம் சேர்த்தால் ஓராண்டில் அது 700 கோடி ரூபாயாகப் பெருகியிருக்கும் என்பது நம் மனத்தைவிட்டு மறையாது.

மணவையார் இந்த ''விழா தந்த விழிப்பு'' நாவல் மூலம் சிறு சேமிப்பு உணர்வை, சிக்கனத்தின் உயர்வை சிறுவர்கள் மனத்தில் ஆலம் விதையாக விதைத்துவிட்டார். இந்த விதைகள் மனத்தில் விரிந்த நிழல்தரும் விருட்சமாக வளர்ந்து நிலைத்து நின்று நலமும் வளமும் தரும் என்பது திண்ணம்.

**டாக்டர். பூவண்ணன்**

# 1

பள்ளியின் மணி 'கண கண' என ஒலித்தது. பரந்த வெளியின் மேற்குப் புறத்தில் கம்பீரமாக நின்றிருந்த பள்ளியின் அமைதி மணியோசையினால் குலைந்தது. கூட்டி னுள் அடைபட்டிருந்த பட்டாம்பூச்சிகள் கூட் டங்கூட்டமாகச் சிறகடித்துப் பறந்து வெளியேறு வதுபோல் மாணவ, மாணவிகள் குதூகலத்தோடு வகுப்புகளைவிட்டு வெளியே வந்தனர். அவர் களின் முகங்களில் மகிழ்ச்சி நிறைந்திருந்தது. பைகளை முதுகில் சுமந்தபடியும் கைகளில் ஏந்தி யபடியும் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டு தத்தமது வீடுகளை நோக்கி நடையைக் கட்டினர்.

மண்ணும் மணலும் கலந்திருந்த பள்ளி மை தானத்தின் இரு மருங்கிலும் அசோக மரங்கள்

வானோங்கி வளர்ந்து பள்ளிக்கே தனி அழகை யூட்டின. கிழக்கு மூலையில் அடர்ந்த ஆலமரம் பருத்து வளர்ந்திருந்தது. ஆங்காங்கே கைக் கெட்டும் உயரத்தில் விழுதுகள் தொங்கிக் கொண்டிருந்தன. பறவைகளுக்கு மட்டுமல்லாது அவ்வப்போது மாணவர்கட்கும் அது புகலிடம் தருவதாயமைந்திருந்தது. குளுமையூட்டும் ஆல மர நிழலில் சுந்தரமும் அவன் நண்பர்களும் ஒரு நாளைக்கு இரு முறையாவது அங்கே கூடாமல் இருந்ததில்லை. வழக்கமாக நண்பர்களைச் சந்திக்கும் அந்த ஆலமரத்தடியில் சுந்தரம் தன் நண்பர்களுக்காகக் காத்திருந்தான். பொழுதுபோக் காக ஆங்காங்கே தொங்கிக் கொண்டிருந்த ஆல விழுதுகளை தொட்டு விளையாடிக் கொண்டி ருந்தான். அவன் எதிர்பார்ந்தபடியே முருகு அவனை நோக்கி வேகமாக வந்து கொண்டி ருந்தான். அவன் வரும் வேகத்தைப் பார்த்தால், ஏதோ புதிய செய்தியோடு வருபவன் போல் தோன்றியது.

இருவரும் வெவ்வேறு வகுப்பில் படிப்ப வர்கள். எனினும், ஒன்றாகப் பழகி வருபவர்கள் நல்ல நண்பர்கள்.

முருகு வந்ததும் வராததுமாகக் கூறினான்.

''இன்னிக்குச் சிங்காரத்துக்குச் சரியான தண்டனை கிடைச்சுதுடா!. இதுவரை நம்மிடம் மட்டும் தன் கைவரிசையைக் காட்டி வந்தான். இன்னிக்கு ஆசிரியரிடமே வாலை ஆட்டிட்டான். ஆசிரியருக்கு அவன் மீது ரொம்பக் கோபம். நெறையத் திட்டிட்டார். நீண்ட நேரம் பெஞ்சு மேலே நிறுத்திட்டார்'டா'!''

மூச்சுவிடாமல் முருகு சொல்லி முடித்தான். ''பின்னே. கோபம் வராதா? அவன் எவ்வளவு பெரிய குறும்பு செய்திருக்கான்!'' என்று கூறிக் கொண்டே காளிமுத்து அங்கே வந்து சேர்ந்தான்.

காளிமுத்து, சிங்காரத்தின் வகுப்புத் தோழன் மட்டுமல்ல; நெருங்கிய நண்பனும் ஆவான். ஆனால், சிங்காரத்திடம் இல்லாத சில நல்ல குணங்கள் இவனிடம் உண்டு. சிங்காரம் போல் அல்லாமல் சுந்தரத்திடமும் அன்போடும் பண்போடும் பழகி வந்தான். சுந்தரம் போலவே முருகுக்கும் காளிமுத்துவை ஓரளவு பிடிக்கும்.

''சிங்காரம், அப்படி என்னதான் குறும்பு செய்துவிட்டான்!'' சிங்காரம் தன் வகுப்பு ஆசிரி

யரிடம் செய்த குறும்பு என்ன என்பதை அறிந்து கொள்ளும் பேரார்வம் சுந்தரத்தைக் கவ்விப் பிடித்துக் கொண்டது.

''அப்படி என்னதான்'டா' செய்தான்?''

முருகுவின் தோளை அழுத்தியபடி சுந்தரம் ஆவல் பொங்கக் கேட்டான். முருகுவின் வாயிலிருந்து வெளிப்படும் வார்த்தைகளை உன்னிப்பாகக் கவனிக்கும் பாவனையில் கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்தான்.

இதைக் கவனித்த முருகு சிறிது கனைத்தபடி ஒரு ஏளனப் புன்னகையைத் தவழவிட்டவனாய் சுந்தரத்தை நோக்கி,

''நீ ஒழுங்காக வகுப்புக்கு வந்தால் தானே, உனக்கு இதெல்லாம் தெரியும். நீதான் அடிக்கடி மட்டம் போட்டறியே! உனக்கு எங்கே இதெல்லாம் தெரியப் போவுது''

சுந்தரம் அடிக்கடி வகுப்புக்கு வராததைச் சுட்டிக்காட்டி முருகு பேசியது சுந்தரத்துக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. இதனால் சுந்தரத்தின் குற்ற மனம் குறுகுறுக்கவே செய்தது.

என்றாலும் சிங்காரம் செய்த குறும்பை அறிந்து கொள்ள அவன் உள்ளம் துடித்தது. பொறுமை இழந்தவனாக முருகை நோக்கி,

''விஷயத்தைச் சொல்லுன்னா, பெரிசா என் னமோ கதையளக்கிறீயே! சிங்காரம் அப்படி என்னதான் செய்திட்டான்?'' சுந்தரத்தின் ஆவலும் அவசரமும் வார்த்தை வடிவில் போட்டியிட்டன.

இனியும் 'சஸ்பென்சை' வளர்க்க விரும் பாத முருகு சிங்காரம் செய்த குறும்பை விளக்கத் தொடங்கினான்.

''நேற்றுக் காலை வகுப்பில் வானொலி பற்றிப் பாடம் நடந்தது. அப்போது ஆசிரியர் பேச்சுவாக்கில் எங்க வீட்டு வானொலிப் பெட்டி கூட பழுதாகிவிட்டது என்று கூறியிருக்கிறார். இதைக் கேட்ட சிங்காரம், நேற்று மாலை ஆசி ரியர் வீட்டில் இல்லாத நேரம் பார்த்து அங்கே போயிருக்கிறான். அவர் மனைவியிடம் ''ஆசி ரியர் கடைத் தெருவில் உள்ள 'ரேடியோ ரிப் பேர்' கடையில் இருக்கிறார். ரிப்பேராக உள்ள ரேடியோவை ரிப்பேர் செய்ய வானொலிப் பெட்டியைக் கடைக்குக் கொண்டுவரச் சொன்

னார்!'' என்று ஆசிரியர் மனைவியிடம் பொய் கூறியிருக்கிறான். அந்தம்மாவும் அவன் கூறியதை உண்மை என நம்பியிருக்கிறார். பழுதடைந்த வானொலிப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு கடை வீதிக்கும் போயிருக்கிறார். அங்கே ஆசிரியர் இல்லை. ஏமாற்றத்தோடு ஆசிரியர் மனைவி திரும்பியிருக்கிறார். வீட்டுக்குத் திரும்பிய ஆசிரியர் இதை அறிந்தபோது சிங்காரத்தின் மீது மிகுந்த கோபம் கொண்டார். அவ்வாறு அவர் கோபம் கொண்டது நியாயம் தானே?'' வினா வடிவில் தன் நியாய உணர்வை வெளிப்படுத்தினான் முருகு.

இவர்கள் விவாதம் முற்றுப் பெறுவதற்கு முன்னதாகவே சிங்காரமும் அங்கே வந்து சேர்ந்தான். நண்பர்கள் தான் செய்த குறும்பைப்பற்றி பேசிக் கொண்டிருப்பதை ஊகித்துணர்ந்தவனாய் அவர்களை நோக்கி ஒருவித ஏளனப் பார்வை பார்த்தவனாய்.

''நான் பெஞ்சு மேலே நின்னதைப் பற்றித் தானே பேசிச் சிரிக்கிறீங்க? நான் எப்போதாவது ஒரு தடவைதான் பெஞ்சு மேலே நிற்கிறேன். முருகுவோட உயிர் நண்பன் அறிவானந்தம் தினந்

தோறும் வகுப்புக்கு வெளியே நிற்கிறானே? அதைவிட இது ஒன்றும் கேவலமில்லை''

தன்னைத் தாழ்த்திப் பேசியவர்களுக்குத் தக்க பதிலடி கொடுத்துவிட்டதாக சிங்காரம் இறு மாந்தான். ஏளனப் புன்னகையோடு தன் நண்பர் களை நோக்கினான். அறிவானந்தத்தைப் பற்றி இழிவாகப் பேசியதில் அவனுக்கு ஒருவித மகிழ்ச்சி மனதுக்குள் ஏற்படவே செய்தது.

ஆனால், அறிவானந்தம் பற்றி சிங்காரம் எகத்தாளமாகப் பேசியது அங்கிருந்த யாருக் குமே பிடிக்கவில்லை. அறிவானந்தம் படிப்பில் மிகவும் கெட்டிக்காரன். எல்லோரிடமும் அன் பாகப் பழகுவான். நண்பர்களுக்கு எந்த உதவி யையும் செய்யத் தயங்கமாட்டான். அதனால் மாணவர்கள் எல்லோருக்குமே அவனை ரொம் பப் பிடிக்கும். ஒழுக்கத்திலும் பண்பிலும் சிறந் தவன். இதனால் அவனை ஆசிரியர்களும் விரும் பினார்கள். அவனிடம் அன்பு செலுத்தினார்கள். ஆதரவு காட்டினார்கள்.

அவன் மீது பொறாமைப்படும் சிங்காரத் துக்கு மட்டும் இதெல்லாம் பிடிக்காது. அறிவா

னந்தத்தின் நற்குணங்களையும் நல்லியல்புகளை யும் மற்றவர்கள் புகழ்ந்து பேசுவது அவனுக்கு அறவே பிடிக்காது. எனவே, அறிவானந்தத்தைத் தாழ்த்திப் பேசுவதில் எப்போதும் அவனுக்குத் தனி மகிழ்ச்சி.

அறிவானந்தத்தை இப்படி சிங்காரம் மட் டம் தட்டிப் பேசியது நண்பர்கள் யாருக்குமே பிடிக்கவில்லை. எனவே, சிங்காரம் பேசியதை மறுத்துப் பேசினான் முருகு.

''வீணாக 'ஏன்டா' அவனை இழுக்கறே. அவன் எந்தத் தவறையும் செய்யறதில்லே, அத னாலே தண்டனை அனுபவிக்க நிற்கிறதும் இல் லை. படிப்பிலும் மற்ற திறமைகளிலும் அவன் தானே பள்ளியிலேயே முதலாவதாக இருக் கான்''

அறிவானந்தத்தைப் புகழ்ந்து பெருமை யாக முருகு பேசியபோதிலும் வகுப்பறைக்கு வெளியே அறிவானந்தம் நிற்பதற்கான கார ணத்தை 'சஸ்பென்சாகவே' விட்டுவிட்டான்.

அறிவானந்தம் பற்றி முருகு கூறியது முழு உண்மை. என்றாலும் அறிவானந்தம் வகுப்புக்கு

வெளியே நிற்பதன் இரகசியம் சுந்தரத்துக்குப் புலப்படவே இல்லை. அதை அறிந்து கொள்ள அவன் உள்ளம் துடித்தது. ஆர்வப் பெருக்கோடு அவன் முருகை நோக்கி வினா தொடுத்தான்.

''நீ சொல்வது ரொம்ப சரி. அறிவானந்தம் எல்லாத்திலேயும் முதல் மாணவன்தான். ஆனால், அடிக்கடி வகுப்பறைக்கு வெளியே நிற்கிறானே அது ஏன்?''

சரியான காரணத்தை அறிய வினா தொடுத்தான் சுந்தரம்.

''அவனும் நம்மைப் போல் சரியான நேரத்தில் பள்ளிக்கு வரத்தான் விரும்புறான். அதுக்காக எவ்வளவோ முயற்சியும் செய்யறான். ஆனாலும் அவனாலே நேரத்துக்குப் பள்ளிக்கு வர முடியறதில்லை.'' புதிராகவே பதிலளித்தான் முருகு.

இந்தப் பதில் மற்றவர்கட்கு மேலும் ஆர்வத்தைத் தூண்டியது. சரியான காரணத்தைத் தெரிந்து கொள்ளத் துடித்தார்கள். அதை அறிந்து கொள்ளும் ஆவலில் சுந்தரம் மேலும் வினா கொடுக்கலானான்.

''வகுப்புக்குத் தாமதமாக வரும்படியா அப்படி என்ன பெரிய வேலை அவனுக்கு?''

சுந்தரமும் சிங்காரமும் ஆர்வத் துடிப்புடன் முருகுவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந் தார்கள். முருகோ அவர்களின் ஆர்வத்தைத் தூண் டிவிடும் வகையில் மேலும் புதிராகவே பேசத் தொடங்கினான்.

''வகுப்புக்குத் தாமதமா வர்றதுனாலேதான் அவங்க வீட்டிலே சோறே பொங்குது?'' எனச் சுந்தரத்தின் கேள்விக்குச் சுடச்சுட பதில் அளித் தான் முருகு. எனினும் மர்ம முடிச்சை அவிழ்த்த பாடில்லை. இது சிங்காரத்துக்குச் சற்று எரிச்சலா கவே இருந்தது. இருப்பினும் தன் வெறுப்பை வார்த்தையால் முருகை நோக்கித் தன் பார்வை யை ஓட்டினான்.

சுந்தரம் மனதுக்கு இன்னும் மர்மம் முழு மையாகத் துலங்காததால், அவனுக்கும் சற்று வெறுப்பாகவே இருந்தது. இருவரும் சரியான காரணத்தை அறிந்து கொள்ளும் வகையில் முரு குவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார் கள். இதுவரை இவர்களின் உரையாடலை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த காளிமுத்

துக்கு இனியும் பேசாமல் இருக்க முடிய வில்லை. அவனுக்கும் காரணத்தை அறிந்து கொள்ள ஆர்வத் துடிப்பாக இருந்தது. அவன் முருகை நோக்கிப் பேசத் தொடங்கினான். 'வகுப்புக்குத் தாமதமா வர்றதுக்கும் அவங்க வீட்டிலே சோறு பொங்குறதுக்கும் என்னடா தொடர்பு?' சற்று வேகமாகவே காளிமுத்து கேட் டான். இக் கேள்வி அவனுள்ளிருந்து வெளிப் பட்ட ஆர்வப் பெருக்கை வெளிப்படுத்துவதாயி ருந்தது.

மேன்மேலும் மர்மத்தை நீட்டித்துச் செல்ல விரும்பாத முருகு லேசாகக் கனைத்துக் கொண்டு அந்த இரகசியத்தைத் தெளிவாக்கத் தொடங் கினான்.

''அறிவானந்தம் குடும்பம் ரொம்ப ஏழைக் குடும்பம். அவனோட அப்பா ரொம்ப நாளைக்கு முந்தியே இறந்துட்டார். அவனோட அம்மா கடைகளுக்குப் பலகாரம் சுட்டு விற்கி றாங்க. காலையில் சுட்ட பலகாரங்களை அறிவா னந்தம்தான் கடைவீதிக்குக் கொண்டு சென்று வாடிக்கைக் கடை ஒவ்வொன்றுக்கும் கொடுத்து

வருவான். இந்த வேலை நிறைய நேரத்தை எடுத்துக் கொள்ளும். காலை வேளையில் அந்த வேலை முடிந்த பிறகே. அவன் பள்ளிக்கூடம் வரமுடியும். எவ்வளவுதான் விரைவாகப் போட் டாலும் பள்ளிக்கூடம் வருவதற்குத் தாமதமாகி விடுகிறது. அதனாலேயே அவன் வகுப்புக்குத் தாமதமாக வரும்படி ஆயிடுது.''

முருகு ஒருவாறு பேசிமுடித்து நண்பர் களின் முகங்களை ஆவலோடு நோக்கினான். ஒவ்வொருவர் முகத்திலும் வெவ்வேறு உணர்வு கள் நிழலாடிக் கொண்டிருந்தன.

சுந்தரம் எதையோ நினைவுபடுத்திக் கொண் டவனாக,

''நான்கூட பலநாள் பார்த்திருக்கிறேன். காலை யில், ஒவ்வொரு கடையாகப் போய் வருவான். பாவம்'டா அறிவானந்தம்!'' தன் ஆழ்ந்த அனுதா பத்தை ஆறுதல் உணர்வோடு வெளிப்படுத் தினான் சுந்தரம்.

அதே சமயம், மேலும் ஒரு விந்தையான சந்தேகத்தைக் கிளப்பினான் முருகு.

''அறிவானந்தம் வகுப்புக்குத் தாமதமா வர்றான். ஆனால், எல்லாப் பாடத்திலும் எப்போதும் அவனுக்கு முதலிடமே கிடைக்குது! நாமும் தான் நேரம் தவறாம வகுப்புக்கு வர்றோம். இருந்தாலும், முப்பது மார்க்குக்கு மேலே மூக்கை நீட்டவே முடியலே. ஆனால் இவ்வளவு கஷ்டத்துக்கு இடையிலே அவனால் மட்டும் எப்படி'டா மதிப்பெண்களைக் குவிக்க முடியுது?'' வியப்போடு கேட்டான்.

அறிவானந்தம் அதிக மதிப்பெண்கள் வாங்கும் மர்மத்தைப் போட்டு உடைப்பதாக நினைத்துக் கொண்டு சுந்தரம் பேசினான்.

''ஒருவேளை ஏழைப் பையன் கஷ்டப்பட்டுப் படிக்கிறானேன்'னு ஆசிரியர் மதிப்பெண்களை அள்ளி விடுகிறாரோ என்னவோ!''.

சுந்தரத்தின் பேச்சில் பொறாமையும் கேலியும் கலந்திருந்தது.

சிங்காரம் எகத்தாளச் சிரிப்புச் சிரித்துக் கொண்டு'' அதெல்லாம் இல்லேடா. ஆசிரியரை நல்லா காக்காபிடிச்சு வச்சிருக்கான்'டா. அவர் வீட்டுக்கு அடிக்கடி போய் வீட்டு வேலை

யெல்லாம் கூட செய்யறான்'டா. அதான் அவனுக்கு மாாக்குகளை வாரிவிடறார் ஆசிரியர்''

ஏதோ பெரிய கண்டுபிடிப்பை வெளிப் படுத்திய பெருமித உணர்வோடு சிரித்தான்.

சிங்காரம் பேசிய பேச்சும் சிரிப்பும் மற்றவர்கட்குப் பிடிக்கவில்லை என்பதை அவர்கள் முகச் சுழிப்புச் சொல்லாமல் சொல்லியது.

சிங்காரம் பேசியதைக் கேட்கப் பிடிக்காத முருகு ''ஏன்'டா வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசறே அறிவானந்தம் கவனம் பாடத்திலே மட்டும் இருக்கு. நம்ம கவனம்?...'' சொல்லி முடிப்பதற்குள் சிங்காரம் எதையோ நினைத்துக் கொண்டவனாய்க் குறுக்கிட்டான் :

''நல்ல வேளையாக ஞாபகப்படுத்தினே, முருகு இன்னிக்கு எங்கம்மா மசால்வடை சுடப் போறதா சொன்னாங்க. நான் போறேன்'ப்பா?'' என்று கூறிவிட்டு ஓட்டமும் நடையுமாக விரைந்து சென்றான்.

மற்றவர்களும் சரியான சாப்பாட்டு ராமன்' டா, என்று முணு முணுத்தவாறே கலைந்து சென்றனர்.

## 2

மாலை நேரம். சாலையில் மக்கள் நடை மாட்டம் சற்று குறைந்தே காணப்பட்டது. சாலையோரமாக அடர்ந்து படர்ந்த தூங்கு மூஞ்சி மரம் ஒன்று இருந்தது. பருத்து வளர்ந்திருந்த அம் மரத்தடியில் எப்போதும் நிழல் இருந்து கொண்டேயிருக்கும். அதனடியில் போவோர் வருவோர் சற்று நேரம் தங்கி இளைப்பாறிச் செல்வர். அந்த மரத்தடிதான் இம்மாண நண்பர்கள் அடிக்கடி சந்தித்துப் பேசும் இடமாக இருந்து வந்தது. அம் மரத்தடி நிழலில் யாரையோ எதிர்பார்த்தவாறு காளிமுத்து காத்திருந்தான். அவன் கையில் ஒரு பொட்டலம் இருந்தது. கெட்டித்தாளில் சுற்றப்பட்டிருந்ததால் அப்பொட்டலத்துள் இருப்பது என்ன என்பது தெரியவில்லை. இதைக் கண்ட முருகு அவனை நோக்கி வந்தான்.

''என்ன காளிமுத்து! இங்கே நிற்கிறே? யாரையோ எதிர்பார்த்துக் காத்திருப்பது போலத் தெரியுது. யாரை எதிர்பார்த்துக் காத்திருக்கிறே?'' முருகு கேட்ட கேள்வி அவனுக்கு ஒரு புரட்டாக இருக்கவில்லை அவன் அசட்டையாகவும் சாதாரணமாகவும் பதில் அளித்தான்.

''இன்னிக்குச் சினிமாவுக்குக் கூட்டிட்டுப் போறதா சிங்காரம் சொன்னான். அவனுக்காகத்தான் பொட்டலத்தோடு காத்திட்டிருக்கேன். வருவதாகச் சொன்ன அவன் இன்னும் வந்தபாடில்லை.'' சிங்காரம் வராததால் ஏற்பட்ட சலிப்பை வார்த்தைகளால் வெளிப்படுத்தினான்.

காளிமுத்துவின் பதில் முருகுக்குச் சற்று வியப்பாகவே இருந்தது. காளிமுத்துவையும் அவன் கையிலிருந்த பொட்டலத்தையும் மாறி மாறி ஏற இறங்கப் பார்த்துக் கொண்டிருந்த முருகு தன் ஐயத்தைப் போக்கிக் கொள்ள முயன்றான்.

''பொட்டலமா? சினிமா பார்க்கப் பொட்டலம் எதுக்குடா?''

முருகு கேட்ட கேள்வி காளிமுத்துக்குச் சிரிப்பை வரவழைத்தது. எனினும் அதை அடக்கிக் கொண்டு பூஞ்சிரிப்பு சிரித்தபடி முருகுவின் ஐயத்தைப் போக்கும் வகையில் பதில் கூற முனைந்தான் காளிமுத்து.

''உனக்குத்தான் சிங்காரத்தைப் பத்தி நன்றாகத் தெரியுமே. வகுப்பிலேயே ஆசிரியருக்குத் தெரியாம, ஏதாவது நொக்கு நொறுவலை மென்னுகிட்டே இருப்பான்! ஜாலியா சினிமா பார்க்கும்போது சும்மா இருப்பானா? அவன்தான் சரியான 'அறவை எந்திரம்' ஆச்சே.

ஒருவாறு 'நண்பன் புராணம்' பாடி முடித்தான் காளிமுத்து.

''அதுக்காக, நீ உன் காசிலே பொட்டலம் வாங்கிட்டுப் போறேயாக்கும். பொட்டலம் கூட பெரிசாத்தான் இருக்குது!'' கேலியும் கிண்டலும் கலந்தவாறு பேசினான் முருகு.

இதைக் கேட்ட காளிமுத்து ''என் காசிலே வாங்க'லேடா!' இவையெல்லாம் வாங்க சிங்கா

ரம்தான் காசு கொடுத்தான். அக் காசுக்குப் பல காரம் வாங்கிய வேலை மட்டும்தான் என்னுடையது.'' என்று முருகு கேட்ட கேள்விக்குப் பதிலளித்தபடி மீண்டும் சிங்காரம் வரும் திக்கை நோக்கிப் பார்வையைச் செலுத்தினான். சிங்காரம் வருவதாகத் தெரியவில்லை. சலிப்புடன் மீண்டும் முருகுவிடம் திரும்பினான்.

முருகு பேசினான்.

''சிங்காரம் ரொம்பக் கொடுத்துவச்சவன் 'டா அவன் எப்பப் பார்த்தாலும் எதையாவது தின்னுக்கிட்டே இருக்கான். சினிமாவுக்கு அடிக்கடி போறான். அவனுக்கு அவன் அப்பா நிறையக் காசு கொடுக்கிறார். எங்கப்பா, எனக்கு ஒரு ரூபாய் கொடுப்பதற்குள் ஒன்பதாயிரம் கேள்வி கேட்டு துளைச்சு எடுத்தர்றார் என்று கூறி, தன் நிலைமையை எண்ணி வருந்தினான் முருகு. தனக்கும் இதைப் போல் அமையவில்லையே என ஏங்கினான். ஒருகணம் சிங்காரத்தின் நிலையை எண்ணிப் பொறுமினான். இதைக் கண்ட காளிமுத்து முருகைத் தேற்றும் வகையில் ஆறுதல் கூறும் முகமாக, ''முருகு! நீ

நினைக்கிற மாதிரி சிங்காரத்துக்கு அவன் அப்பா காசு கொடுக்கிறதே இல்லை. அவர் கொஞ்சம் 'கஞ் சன்'னு சிங்காரமே சொல்லியிருக்கான்!''

இதைக் கேட்ட முருகு 'அப்போ, சிங்காரம் அம்மாவின் செல்லப்பிள்ளை'ன்னு செல்லு!' என்று கூறி பலமாகச் சிரித்தான்.

தொடர்ந்து மேலம் விளக்க முனைந்தான் காளிமுத்து.

''சிங்காரத்தோட அம்மா ரொம்ப நல்லவங் கடா. அவங்களுக்கு இவன் ஒரே பையன். அத னாலே இவன் மேலே உயிரையே வச்சிருக் காங்க. வசதிக் குறைவான குடும்பம்தான். இருந் தாலும் அவனை நல்லா படிக்க வைக்க ரொம்ப ஆசைப்படறாங்க. அதுக்காக அவன் என்ன கேட்டாலும் தர்றாங்க. எல்லாமே அவன் அப்பா வுக்குத் தெரியாமல்தான்!''

காளிமுத்து கூறியதைக் கேட்ட முருகு மேலும் சிங்காரம்பற்றி தெரிந்து கொள்ள ஆவ லானான் தொடர்ந்து சிங்காரம் பற்றி காளிமுத்து விளக்கினான். காளிமுத்துக்குச் சிங்காரம் குடும்

பத்தைப் பற்றி அதிகம் தெரியும். சிங்காரம் தன் அப்பாவுக்குத் தெரியாமல் அடிக்கடி செய்யும் தவறுகளைத் தவறாமல் பார்த்தவன் அவன் சொன்னான்:

"அடிக்கடி பாடப்புத்தகம் வாங்க வேண்டும், நோட்டுப் புத்தகம் வாங்க வேண்டும்; அது வாங்க வேண்டும் இது வாங்க வேண்டும் என்று ஏதாவது பொய் சொல்லி காசு வாங்குவான். அவன் அம்மாவும் அவன் கூறியதையெல்லாம் உண்மை என நம்பி கேட்ட காசைக் கொடுப் பாங்க. கடைத் தெருவில் கண்டதை வாங்கித் தின்பான். பின், நோய் வந்து அவதிப்படுவான். இதனால் அவன் அப்பாவிடம் நல்லா திட்டு வாங்கிக் கட்டிக்குவான். இது அவனுக்கு வாடிக்கை! காளிமுத்து ஒருவாறு சொல்லி முடித் தான்.

"காளிமுத்து! உன்பாடு பரவாயில்லை. உனக்குப் பொட்டலம் பொட்டலமா கிடைக் குது; ஊம்! எங்களைச் சொல்லு!" பெரியதாக ஒரு பெருமூச்சு விட்டபடி காளிமுத்துவைக் கிண்டல் செய்தான் முருகு.

ஏன்'டா பெருமூச்சு விடுறே! உன் உயிர் நண்பன் அறிவானந்தம் கூடப் போனால்....?''

காளிமுத்து கூறி முடிப்பதற்குள் முருகு குறுக்கிட்டான்'' அறிவானந்தம் ஒரு புத்தகப் பூச்சி'டா! முதல் தரக் கஞ்சன்! யாருக்கும் எதுவும் தரமாட்டான்...'' முருகு முழுமையாகச் சொல்லி முடிக்கவில்லை.

''எந்தக் கஞ்சனைப்பற்றி முருகு சொல் கிறான்?'' சிங்காரம் வந்து கொண்டே பேச்சில் குறுக்கிட்டுக் கேட்டான்.

''அறிவானந்தம் பற்றித்தான்!'' என்று காளி முத்து கூறினான்.

இதைக் கேட்டவுடன் சிங்காரம் முகத்தில் ஒரு மலர்ச்சி. ஏளனம் கலந்த எக்காளச் சிரிப்புச் சிரித்தான் சிங்காரம். ''கஞ்சத்தனத்துக்குப் போட்டி வச்சா, அதில் கூட அவன்தான் முதல் பரிசு வாங்குவான்!'' சிங்காரத்தின் பேச்சில் கேலியும் கிண்டலும் கலந்திருந்தது. அறிவானந்தத்தைக் கேலி பேசுவதில் ஒரு அலாதி மகிழ்ச்சி அவன் முகத்தில் தோன்றியது.

சிங்காரம் இம்மாதிரி பேசியது முருகுக்கு அறவே பிடிக்கவில்லை. ஏனெனில், அறிவானந் தத்தின் போக்கு அறிந்தவன். அவன் குடும்ப நிலை தெரிந்தவன். எல்லாவற்றிற்கும் மேலாக அறிவானந்தத்தை அவனுக்கு மிகவும் பிடிக்கும். நெருங்கிய நண்பனும்கூட. எனவே சிங்காரம் கூறியதை மறுத்துப் பேசினான்:

''நீங்கள் நினைப்பதுபோல அறிவானந்தம் ஒன்றும் வடிகட்டின கஞ்சன் இல்லை. உங்களைப் போல் வீண் செலவு செய்யாதவன். அவனைப் போய் 'கஞ்சன்' என்று எப்படி சொல்ல முடியும்? 'கண்டது கற்கப் பண்டித னாவான்' என்பது பழமொழி. இதன்படி தனக்குக் கிடைக்கிற காசுக்கு ஏதாவது பழைய புத்தகம் வாங்குவான். இல்லை என்றால் நல்ல வழியில் செலவு செய்வான். அதுவும் இல்லை என்றால் அந்தக் காசைச் சேர்த்து வைப்பான். சிங்காரம்போல் தின்று தீர்க்கமாட்டான்.'' பட பட என்று கூறிமுடித்தான் முருகு.

தன் நண்பன் அறிவானந்தம் பற்றிய அவ தூறை துடைத்த மகிழ்ச்சி, பெருமிதம் முருகு விடம் காணப்பட்டது.

அறிவானந்தத்தை உயர்த்தியும் சிங்காரத் தைத் தாழ்த்தியும் முருகு பேசியது மற்ற இருவ ருக்கும் அவ்வளவாகப் பிடிக்கவில்லை. தான் கண்டபடி தீனி தின்பதை நியாயப்படுத்த முயன் றான் சிங்காரம்.

''கண்டது தின்ன பலவான் ஆவான்' என்பது பழமொழி. அதன்படி நான் கிடைத்ததை யெல்லாம் தின்கிறேன். உடம்பைப் பலப்படுத் தறேன். உடம்பு பலமாக இருந்தால், பின்னால் எவ்வளவோ உழைத்துச் சம்பாதிக்க முடியும். இது தெரியாமல் பேசறீயே'' என்று பதிலடி கொடுத்தான் சிங்காரம்.

முருகும் விட்டுக் கொடுப்பதாக இல்லை. அவனும் தொடர்ந்து வாதாடினான்.

''கண்டதைத் தின்ன பலவான் ஆவான், என்று நினைத்துக் கண்டதை விழுங்குறே, கடை சியிலே 'கண்டது தின்ன நோயாளி ஆவான்' என்ற பழமொழிப்படி உன் உடம்பு ஆயிடுது. உனக்குச் செல்லப் பெயரே 'நடமாடும் நோ யாளி' என்பதுதானே!''.

இப்படி முருகு கூறியபோது அவனுடன் காளிமுத்தும் சேர்ந்து கொண்டான்.

''ஆமாம், சிங்காரம் தின்பண்டங்களுக்குச் செலவு செய்யற காசையும், அதனால் வர்ற நோய்க்கு அவன் அப்பா செலவு செய்யற காசையும் சேர்த்து வச்சா...'' அவன் முடிக்கும் முன் சிங்காரம் குறுக்கிட்டான். இருவரும் சேர்ந்து தன்னைக் கிண்டல் செய்வது அவனுக்குப் பிடிக்கவில்லை. அவர்களைக் கேலியாகப் பார்த்தபடி,

''என்னையும் 'கஞ்சன் அறிவானந்தம்'னு நெனச்சியா? 25 பைசா கிடைச்சா சேமிப்பு ஸ்டாம்ப் வாங்கி ஒட்டி வச்சுக்க.'' என்றான்.

அறிவானந்தத்தின் சேமிப்பு முயற்சியைச் சிங்காரம் நையாண்டி செய்வதை முருகுவால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எனவே, தொடர்ந்து சிங்காரத்தைப் பேசவிடாமல் இடைமறித்த முருகு ''அவன் நாளைக்கு நல்லதுன்னு இன்னிக்குச் சேமிக்கிறான். இதிலென்ன தவறு என்று பதிலடி கொடுத்தான். சிங்காரமும் சளைக்காமல் தொடர்ந்து வாதிட்டான்.

''நாளைக்கு என்ற கவலை நமக்கு ஏன்? அப்பா, அம்மா நம்மை நன்றாகப் படிக்க வைக்கப் போறாங்க. படித்து முடித்தபின் நாம, வேலைக்குப் போய் நிறைய சம்பாதிக்கப் போகி றோம். அப்புறம் ஏன் நாளையப்பத்தி நாம் கவ லைப்படணும்? அறிவானந்தம் நாளைக்கு என்று கவலைப்பட்டுத்தான் தீரணும் வேறு வழி இல்லை ஏன்'னா அவன் குடும்ப நிலை அப்படி! ஆனால் நான் ஏன் கவலைப்படணும்?'' என்று மூச்சு விடாமல் பேசி முடித் தான். அவன் முகத்தில் வெற்றிப் பெருமிதமும் பெருமையும் காணப்பட்டது.

அறிவானந்தத்தின் குடும்பத்தைத் தாழ்த்தி யும் அவனை ஏளனப்படுத்தியும் பேசியது முரு குக்குப் பிடிக்கவில்லை. சரியான பதிலடி கொடுக்க நினைத்தான்.

''எதிர்கால நம்பிக்கையைவிட உனக்குக் கர்வமும் திமிரும்தான்'டா அதிகமா இருக்கு! அவன் ஏழைங்கிறதை எவ்வளவு எகத்தாளமா சுட்டிக் காட்டறே. சேமிப்பு மூலம் அவன் காசு சேர்க்கிறான். நீயோ கண்டதைத் தின்னு

நோயைச் சேர்க்கிறே. இதுதான் உங்க ரெண்டு பேருக்கும் இருக்கிற வேறுபாடு.''

முருகுவின் பேச்சு சிங்காரத்துக்கு மூக்கு டைப்பாக இருந்தது. காளிமுத்து அதில் உண்மை இருப்பதை அறிந்து ஆமோதிப்பதுபோல் தலையை ஆட்டினான். இதற்குச் சரியான பதில் கூறத் தெரியாமல் சில விநாடிகள் சிங்காரம் விழித்தான். பிறகு சமாளித்துக் கொண்டான்.

''அறிவானந்தத்துக்கு ஒத்துப் பாடறதே உனக்கு வேலையாப் போச்சு'டா! சரியான 'ஜால்ரா!' உன்கூடப் பேசி என்ன பயன்? நாங்க சினிமாவுக்குப் போகணும். வா. காளிமுத்து போகலாம். நான் வர்றேன்'டா.'' என மழுப்பிப் பேசியபடி புறப்பட்டான். காளிமுத்துவும் தின்பண்டப் பொட்டலத்துடன் அவனைப் பின் தொடர்ந்தான்.

'படிப்பைத் தவிர மற்ற எல்லாத்தையும் செய்யறாங்க' என்று தனக்குத் தானே முணு முணுத்தபடி நடையைக் கட்டினான் முருகு.

# 3

பள்ளிக்கூட மணி ஒலிக்க இன்னும் சிறிது நேரம் இருந்தது. மாணவர்களும் மாணவிகளும் தங்கள் புத்தகப் பைகளுடன் தனி யாகவும் சேர்ந்தும் பள்ளியை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள்.

அறிவானந்தமும் சிங்காரமும் சற்று முன் பின்னாகப் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தார் கள். அறிவானந்தத்தை நோக்கி வேகமாக ஓடி வந்தான் முருகு. மூச்சு வாங்க ஓடி வந்தவன் அறி வானந்தத்தை நோக்கி,

''அறிவானந்தம்! உன்னை எங்கே யெல் லாம் தேடினேன், தெரியுமா?'' என்று கேட் டான்.

அறிவானந்தத்தின் அறிவாற்றலையும் அவன் கைக்கொண்டொழுகி வந்த நல்ல பழக்க வழக்

கங்களையும் பிறரிடம் அன்பாகப் பழகும் பண்பியல்புகளையும் கண்டு பொறாமை கொண்டிருந்த சிங்காரம் இதைக் கேட்டு கேலியாகச் சிரித்தான். பின் முருகைப் பார்த்து,

''அவனை ஏன்'டா கண்ட இடமெல்லாம் தேடணும்? கழுதை கெட்டா குட்டிச் சுவர். அறிவானந்தம் பள்ளிவிட்டால் நூலகம்; அதையும் விட்டா பள்ளி 'சேவிங்ஸ் பேங்க்' கௌன்டர்!'' கேலியாகப் பேசிவிட்ட பெருமித்ததோடு நடந்தான்.

இப்படி சிங்காரம் வஞ்சகப் புகழ்ச்சியாகப் பேசியது அறிவானந்தத்துக்குப் பிடிக்கவில்லை. சிங்காரம் இப்படியெல்லாம் அறியாமையால் பேசுகிறானா அல்லது பொறாமையால் பேசுகிறானா என்று அறிவானந்தத்தால் முழுமையாக அனுமானிக்க இயலவில்லை. எதுவாக இருந்தாலும் தகுந்த பதில் தர முருகு முற்பட்டான். ஆனால், அறிவானந்தம் அவனைப் பேசவிடாமல் தானே பேசினான்:

''நூலகமும் சேமிப்பு வங்கியும் யாரையும் குட்டிச்சுவர் ஆக்குகிற இடமில்லை. யாரையும்

குட்டிச்சுவராகாமல் காக்கும் இடங்கள். கத்தியைக் கூர்மையாக்குகிற சாணை மாதிரி புத்தியைக் கூர்மைப்படுத்துகிற கோயில் நூலகம். 'வருங்கால வாழ்க்கைக்குப் பாதுகாப்புத் தருகிற கேடயம் சேமிப்பு' என்று நம்ம ஆசிரியர்கூட அடிக்கடி சொல்றதைக் கேட்டிருப்பியே...'' அறிவானந்தம் முடிக்கவில்லை.

இடைமறித்தான் முருகு.

''ஆசிரியர் சொல்றதைச் சிங்காரம் என்னிக்குக் கேட்டிருக்கான், இன்னிக்குக் கேட்க.''

சிங்காரத்தைப்பற்றி கூறிய அதே சமயம் அறிவானந்தத்தைப் பார்த்துக் கேட்டான்.

''போகட்டும். ஒவ்வொரு ஆண்டும் சேமிப்பு வார விழாவிலே 'சிறந்த சேமிப்பு மாணவன்'னு உன்னைத் தேர்ந்தெடுக்குறாங்க. அதற்கான பரிசையும் நீயே வாங்குறே. வசதிக் குறைவான உன்னாலே எப்படி தொடர்ந்து சேமிப்பில் காசு போட முடியுது?''

இப்படியொரு சந்தேகம் நீண்ட நாட்களாக முருகுவின் மனதில் இருந்து கொண்டேயிருந்

தது. இதைப்பற்றி அறிவானந்தத்திடம் கேட்க வேண்டும் என்று எண்ணியபோதெல்லாம் ஏனோ, கேட்க இயலாமல் போய்விட்டது. அதற்கான சரி யான சந்தர்ப்பம் இப்போது வாய்க்கவே தன் சந்தேகத்தைப் போக்கிக் கொள்ள வினா வடிவில் கேட்கலானான்.

முருகுவின் கேள்விக்கு அறிவானந்தம் பதில் சொல்வதற்கு முன்பாகவே சிங்காரம் பேச முற்பட்டான். அறிவானந்தத்தை மட்டம் தட்ட அதை நல்ல வாய்ப்பாகக் கருதினான். அறிவா னந்தத்தைப் பார்த்து ஒரு ஏளனப் பார்வை பார்த் தான். நமுட்டுச் சிரிப்புச் சிரித்தபடி பேசினான்:

''இது என்னடா கேள்வி? பாவம்! அறிவா னந்தம் அம்மாவுக்குப் படிக்கத் தெரியாது. கடை களுக்குப் பலகாரம் போட்டு வாங்குகிற காசிலே கொஞ்சம் 'அப்படி இப்படி' ஒதுக்கிட்டாப் போச்சு!''

சிங்காரத்தின் சொற்கள் அறிவானந்தத்தை வேதனைப்படுத்தின. அவன் பதிலுக்குப் பேசி னான்:

''சிங்காரத்துக்கு அது கைவந்த கலை. அவன் மாதிரியே எல்லாரும் இருப்பாங்கன்'னு நினைக்கிறான் போலிருக்கு!'' என்று கூறி அமை தியானான்.

பொறாமை உணர்வோடு சிங்காரம் அறிவா னந்தம் மீது அபாண்டம் சுமத்திப் பேசியதைக் கேட்ட முருகு அவனுக்குச் சரியான மூக்கு டைப்புக் கொடுக்க எண்ணினான். அதற்குள் அறி வானந்தம் முந்திக்கொண்டு கண்ணியமான முறையில் பதில் தந்தது முருகுக்குப் போதியதா கப்படவில்லை. எனவே தொடர்ந்து முருகு தன் நண்பனை ஆதரிக்கும் வகையில் சிங்காரத்தை நோக்கிக் கேட்டான்:

''அறிவானந்தத்துக்கு அவன் அம்மாவை விட்டா வேறு யார் இருக்காங்க? அவன் ஏன்'டா அவன் அம்மாவை ஏமாத்தணும்? அதுக்குத் தேவையே இல்லையே!'' என்று கூறியபடியே அறிவானந்தத்தை பார்த்துக் கேட்டான்:

''ஆமா, அறிவானந்தம்! உன்னாலே எப்படி இவ்வளவு காசு சேர்க்க முடியுது?''

இந்தக் கேள்வியிலிருந்து முருகுக்கும் தன் மீது கொஞ்சம் சந்தேகம் இருப்பதாக அறிவா னந்தம் கருதினான். அதைப் போக்கும் வகையில் தன் நிலையை விளக்கினான்.

''எங்கம்மா எனக்கு ஏதாவது வாங்கித் தின்ன அப்பப்பக் காசு கொடுப்பாங்க. எப்பவா வது சினிமா பார்க்கிறதுக்கும் காசு தருவாங்க. இந்தச் காசையெல்லாம் சிறு சேமிப்பிலே போட் டுடுவேன்!''.

இந்த விளக்கத்தைக் கேட்ட முருகுக்கு வியப்பாக இருந்தது.

''அப்போ, நீ சினிமாவுக்கே போவது இல்லையா?'' என்று கேட்டான்.

''எப்பவாவது ஒரு தடவை அம்மாவுக்குத் துணையாகப் போவேன். பெரும்பாலும் நா னாகப் போகமாட்டேன். நமக்கு என்றுதான் அடிக்கடி பள்ளியிலே சினிமா படம் காட்டறாங் களே! அதுவும், பாடம் சம்பந்தமா நல்ல நல்ல படங்கள்'லாம் காட்டறாங்களே! அது போதா தா?''

அறிவானந்தம் பதிலைக் கேட்டுச் சிங்காரம் ஏளனமாகச் சத்தமிட்டுச் சிரித்தான். அவன் சிரிப் பில் எக்காள உணர்வு கொப்பளித்தது. அறிவா னந்தத்தை மட்டம் தட்டவும் அவன் சினிமா ரச னையைக் கேலி செய்யவும் தனக்கு வாய்த்த வாய்ப்பாகக் கருதி தொடர்ந்து பேசினான்:

பள்ளிக்கூட சினிமாவை நீதான்'டா மெச் சிக்கணும்! சண்டைக் காட்சியே இல்லாத பள் ளிக்கூடச் சினிமா ஒரு சினிமாவா? பெரிய அறுவை'டா! சலிப்புடன் சிங்காரம் கூறி முடித் தான்.

''படிப்பையும் பள்ளிக்கூடத்தையும் கூட 'அறுவை'ன்னு சொல்ற உனக்குப் பள்ளிக்கூடச் சினிமாவும் 'அறுவை'யாகத்தானே இருக்கும்!'' இது அறிவானந்தத்தின் சூடான பதில்.

இடைமறித்தான் முருகு

''அறிவானந்தம்! சேமிப்புத் திட்டத்திலே உனக்கு எப்படி இவ்வளவு ஆர்வம் ஏற்பட்டது? ஆண்டுதோறும் 'சிறந்த சேமிப்பாளன்' என்கிற பரிசும் உனக்குத் தானே தொடர்ந்து கிடைக் குது?''

முருகுவின் கேள்வி சிங்காரத்துக்கும் பிடித் திருந்தது. காரணத்தை அறிய ஆவலோடு இரு வரும் அறிவானந்தத்தை ஏறிட்டு நோக்கினர். அறிவானந்தம் தான் சேமிக்கத் தொடங்கியதை விளக்கினான்:

"ஆரம்பத்தில் எனக்குக் கூட சேமிப்பில் அவ்வளவு விருப்பம் ஏற்படவில்லை. ஆனால், 25 பைசா, 50 பைசா, ஒரு ரூபாய் என்று தொகை அதிகரிக்க ஆர்வமும் அதிகரித்தது. பள்ளிச் சேமிப்பு வங்கியில் பணம் நாளுக்கு நாள் கூடி யது. தொகை பெருகப் பெருக ஆர்வமும் அதி கரித்தது. என்னுடைய வீண் செலவுகள் குறைந் தது. சின்ன நீரோடை, நீர் பெருகப் பெருக அரு வியாகும். அதுவே பின்னர் நீர்ப் பெருக்கால் நதியாகும். அதே மாதிரி இப்ப என் கணக்கிலே ஒரு கணிசமான தொகை சேர்ந்திருக்கு. ஏழை யாக இருக்கிற எனக்கும் எங்கம்மாவுக்கும் இதுவே பெரிய பாதுகாப்பு'ன்னு நினைக் கிறேன்!" தன் சேமிப்பு முறையைச் சொல்லி முடித்தான் அறிவானந்தம்.

அறிவானந்தத்தின் சேமிப்பு முறையும் அதில் அவன் காட்டும் ஆர்வமும் முருகுக்கு

மிகவும் பிடித்துவிட்டது. அவன் நல்ல செயலை மனதுக்குள் பாராட்டிக் கொண்டான்.

''படிப்பு சம்பந்தமான போட்டிகளில் ஆண்டு தவறாமல் பரிசு வாங்குவே! அதுபோலவே, சிறு சேமிப்புப் போட்டியிலும் தொடர்ந்து இந்த ஆண்டும் உனக்குத்தான் பரிசு கிடைக்கப்போகிறது!''

அறிவானந்தத்தை வாழ்த்தும் வகையில் முருகு பாராட்டிக் கூறினான். இதற்கு அறிவானந்தம் நன்றி தெரிவித்துக் கொண்டான். உடன் வந்த சிங்காரம் ''பரிசுக்கு என்றே பிறந்தவன்'டா அறிவானந்தம்!'' என்று கூறினான்.

இது பாராட்டா அல்லது பொறாமையா என்பது தெரியாமலே மூவரும் வகுப்பறைக்குள் நுழைந்தனர்.

# 4

பள்ளி இடைவேளையின்போது வழக்கமாக நண்பர்கள் சந்திக்கும் பள்ளிக்கூட மரத்தடியில் காளிமுத்து மட்டும் நின்று கொண்டிருந்தான். அவனை நோக்கி சுந்தரம் வந்தான். வந்ததும் வராததுமாகக் கேட்டான்:

''காளிமுத்து! எங்கே சிங்காரத்தை ரெண்டு நாளாகக் காணோம்? அவனுக்கு என்ன ஆச்சு?'' என்றான்.

''உனக்குத் தெரியாதா? அவனுக்கு இரண்டு நாளா ஒரே வயிற்றுப் போக்கு. இப்பத்தான் அவனைப் பார்த்துட்டு வர்றேன். அவனை அவங்க அப்பா ரொம்பத் திட்டிட்டார்'டா!.

காளிமுத்து சொல்லி முடிக்குமுன் பதற்றத்துடன் சுந்தரம், ''ஏன், ஏதாவது தப்புப் பண்ணிட்டானா?'' என்று கேட்டான்.

சிங்காரம் செய்த தவறை காளிமுத்து விளக்க முற்பட்டான்:

''சிங்காரம் தன் அப்பாவுக்குத் தெரியாம, அவசரமா ஒரு புதுப் புத்தகம் வாங்கணும்'னு அவன் அம்மாகிட்டே பொய் சொல்லி பணம் வாங்கியிருக்கான். பிறகு தன் நண்பர்களை அழைத்துக் கொண்டு ஓட்டலுக்குப் போயிருக்கான். அங்கே எதை எதையோ மூக்குப் பிடிக்கத் தின்னுருக்கான். உடம்புக்கு ஒத்துக்கல்லே. ஒரே வயிற்றுப் போக்கு. பிறகு, வைத்தியம், மருந்து, மாத்திரை. அதோடு, அப்பாவோட திட்டு. எல்லாமே நெறையக் கிடைச்சிருக்கு.''

காளிமுத்து தொடர்ந்து பேசினான்:

''கண்டதை வாங்கித் தின்று உடம்பைக் கெடுத்துக்கிறான். அதோடு, வைத்தியச் செலவை வேறெ உண்டாக்கி வைக்கிறான்'னு அவன் அப்பா மிகவும் வருத்தப்பட்டார். அவன் அம்மாவுக்குக்கூட நிறைய திட்டுவாங்கி வச்சிடறான்'டா!''.

காளிமுத்து வருத்தமாகக் கூறிய வாசகங் களைக் கேட்டு சுந்தரம் வருந்தினான்.

''ஒரே பிள்ளைங்கிற செல்லத்திலே அவன் அம்மா அடிக்கடி காசு கொடுக்கிறாங்க. அவன் விருப்பத்துக்கு எதை எதையோ வாங்கித் தின் னுட்டு, நோயாளியாய்ப் படுத்துக்கறான்'' மிகுந்த வருத்தத்துடன் கூறினான் சுந்தரம்.

''சிங்காரத்துக்கு எப்பவும் என்னென்ன கார ணம் காட்டி அம்மாவிடம் காசு வாங்கலாம் என் கிற ஆராய்ச்சிதான். சினிமா, ஓட்டல், தின் பண்டம் இவைகள்'லேதான் அவனுக்கு எப்ப வும் கவனம்,'' என்று சுந்தரம் கூறினான். அதை உறுதிப்படுத்தும் வகையில் காளிமுத்துவும் தலையை ஆட்டினான்.

# 5

நண்பர்கள் வழக்கமாகச் சந்திக்கும் மரத் தடியில் சிங்காரம் நின்று கொண்டி ருந்தான். மிகவும் களைப்பாகக் காணப்பட்ட சிங்காரத்தை நோக்கிக் காளிமுத்து வந்து சேர்ந் தான்.

சிங்காரத்தின் உடலைத் தொட்டுப் பார்த்த படி காளிமுத்து பேசினான்:

''என்ன சிங்காரம்! உடம்பு சரியாயிடிச்சா? என்னடா நீ! உடம்புக்கு நோய் நொடி'ன்னு அடிக்கடி படுத்துக்கறே?'' அவன் கேள்வியில் அன்பும் பாசமும் பிணைந்திருந்தது. சிங்கா ரத்தின் உடல் நலத்தின் மீது அவனுக்கிருந்த அக்கறையைப் புலப்படுத்தியது. இதைக் கேட்டு நெகிழ்ந்து போன சிங்காரம், தன் நோய்க்கான காரணம் கூற முற்பட்டான்.

இனிமேல் அந்த மூலைக்கடை ஓட்டலுக்குப் போகவே கூடாது'டா! அங்கே பலகாரம் சாப்பிட்டுத்தான் வயிற்றுப் போக்காயிடிச்சு. அந்த ஓட்டல் ரொம்ப மோசம்'டா!''

இதைக் கேட்டபோது காளிமுத்துவுக்குச் சிரிப்பதா அழுவதா என்றே தெரியவில்லை. உடனே அதற்குச் சூடாகப் பதில் சொன்னான்.

''அந்தக் கடை பலகாரம் மட்டும் மோசம் இல்லை. உன் வயிறும்தான். வயிற்றைக் குப்பைத் தொட்டிபோல ஆக்கிட்டா நோய் வராமவேறெ என்ன வரும்?'' என்று இடித்துக் கூறினான்.

அப்போது காளிமுத்து எதையோ நினைவு படுத்திக் கொண்டவன்போல் பேசினான்:

''இப்பதான்'டா ஞாபகத்துக்கு வருது. கோடை விடுமுறையில் தாத்தா வீட்டுக்குப் போயிருந்தேன். அங்கே பாட்டியும் மாமாவும் ஆசை ஆசையாய் எதையெல்லாமோ தின்னக் கொடுத்தாங்க. தின்னக் கிடைச்சதையெல்லாம் ஒரு பிடி பிடிச்சேன். விளைவு கடுமையான

வயிற்று வலி, தொடர்ந்து வயிற்றுப் போக்கு. பிறகு மாத்திரை, ஊசின்னு இரண்டுநாள் பெரும் பாடு அப்போ என் தாத்தா சொன்னது இன்னும் என் மனசிலே பசுமையா இருக்கு.''

அப்படி என்னடா சொன்னார் உன் தாத் தா?''

சிங்காரம் அவசரப்படுத்தினான் காளிமுத்து தொடர்ந்தான்.

'வயிறு என்பது குப்பைத் தொட்டி அல்ல, கிடைத்ததையெல்லாம் வாங்கிக் கொட்டிக் கொள் வதற்கு. அது வைரம், வைடூரியம் போன்ற மிக விலையுயர்ந்த பொருள்களை வைத்துப் பாது காக்கும் பெட்டகம் போன்றதாகும். வயிற்றை அரிய பெட்டகமாகக் கருதி தேவையான வற்றை தேவையான அளவுக்கு உண்டு வந்தால் நோயில் லாமல் நீண்ட காலம் சுகமாக வாழலாம். வயி ற்றைக் குப்பைத் தொட்டியாகக் கருதி கண் டதைக் கொட்டிக் கொண்டால் நோய்க்கு ஆளாகி கொஞ்ச வயதிலேயே இறக்க நேரிடும்' என்று அவன் தாத்தா கூறியதைக் கூறி முடித் தான்.

''உங்க தாத்தா எவ்வளவு பெரிய உண்மையை, எவ்வளவு அழகாய்ச் சொல்லியிருக்கார்.'' சிங்காரத்தின் பாராட்டை ஆமோதிக்கும் வகையில் காளிமுத்து தலையாட்டினான்.

இவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டுக் கொண்டே வந்த முருகு, இடைமறித்துப் பேசினான்.

''சிங்காரத்துக்கு என்ன வந்தாலும் வராவிட்டாலும், அறிவானந்தத்துக்கு இந்த ஆண்டும் வழக்கம்போல பரிசு கிடைக்கத்தான் போகிறது!''

இதைக் கேட்க சிங்காரத்துக்கு எரிச்சலாக இருந்தது. கேட்க விரும்பாதவன்போல முகத்தைச் சுழித்தான். காளிமுத்து நெற்றியைத் தூக்கி, ''என்ன பரிசு?'' என்று கேட்டான்.

இந்த ஆண்டும் வழக்கம்போல் நடக்கப் போகும் சிறு சேமிப்பு வார விழாப் பேச்சுப் போட்டி முதற் பரிசு, அதோட, சிறந்த சிறு

சேமிப்பாளனுக்குரிய பரிசும் அவனுக்குத்தான் கிடைக்குமாம். இதை நான் மட்டும் சொல்ல லே. பள்ளியில் உள்ள எல்லோரும் பேசிக்க றாங்க!''

காளிமுத்து இதைக் கேட்டுவிட்டுச் சிங்கா ரத்தைக் கேலி செய்ய ஆரம்பித்தான்.

''நல்லா சாப்பிடறது. வீண் செலவு செய்ய றது - இப்படி ஒரு போட்டி வச்சா, சிங்காரத்துக் குத்தான் முதற்பரிசு கிடைக்கும்!''

காளிமுத்து பேசிய கேலிப்பேச்சைத் தொ டர்ந்து முருகும் கிண்டல் செய்யத் தொடங் கினான்.

''அது மட்டும் இல்லை. பொய்க்காரணம் காட்டி, வீட்டிலே காசு வாங்குவது எப்படி? என்று ஒரு போட்டி வச்சா அதிலேயும் சிங் காரத்துக்குத்தான் பரிசு - கோப்பை எல்லாமே கிடைக்கும்.''

இவ்விருவரின் நையாண்டிப் பேச்சும் சிங் காரத்தை உசுப்பிவிட்டது. முருகு கேட்டது அவ னுக்கு மிகவும் ரோஷமாக இருந்தது. ஏதோ ஒரு

முடிவுக்கு வந்தவன்போல் தலையை மேலும் கீழுமாக ஆட்டியபடி பேசினான்:

''போதும்'டா உங்கக் கேலிப் பேச்சு. இந்த ஆண்டு எப்படியும் அந்தப் பரிசுகள் அவனுக்குக் கிடைக்காது. எனக்குத்தான் கிடைக்கும் இது உறுதி!''

சிங்காரத்தின் அழுத்தந் திருத்தமான முடிவும் பேச்சும் நம்ப முடியாததாக இருந்தது. ஆச்சரியத்தோடு அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

சிங்காரம் மனதுக்குள் ஏதோ முடிவெடுத்து விட்டான். அதனால் தான் இவ்வளவு உறுதியாகப் பேசுகிறான் என்பதை முருகால் ஓரளவு அனுமானிக்க முடிந்தது. ஆனால், அது எந்த மாதிரியான முடிவு என்பதை அவனால் அனுமானித்து உணர முடியவில்லை. இருப்பினும் சிங்காரம் வீம்புக்காக இப்படிப் பேசுவதாக முருகு நினைத்தான். இருந்தாலும் உறுதிப்படுத்திக் கொள்ள கேள்விக் கணை தொடுத்தான்.

''அதெப்படி, சிங்காரம்! அவ்வளவு உறுதியாகச் சொல்றே. சாதாரணமாக, பள்ளிக்கூடப்

போட்டிகளில் பெயர் கொடுத்துவிட்டு வந்து, பேந்தப் பேந்த விழிப்பே! அதிலும் வரப்போவது சிறு சேமிப்பு விழா! பேருக்குப் பள்ளியிலே சிறு சேமிப்புக் கணக்கு வச்சிருக்கியே தவிர, அதிலே நீ காசே போடறதில்லே. உனக்கு எப்படி'டா பரிசு கிடைக்கும்?'' முருகுவின் கேள்வி மேலும் சிங்காரத்துக்கு ரோஷத்தை உண்டாக்கியது.

முருகுவைத் தொடர்ந்து காளிமுத்துவும் அவனைக் கேலி செய்தான்.

'' ஒரு வேளை பரிசாகக் கொடுக்கப் போற சான்றிதழ்களில், கடைசி நிமிடத்தில் 'அறிவானந்தம்' என்ற பெயருக்குப் பதிலாக, 'சிங்காரம்' என்று யாருக்கும் தெரியாமல் எழுதி வைத்துவிடப் போகிறானோ என்னவோ?'' என்று கூறிச் சிரித்தான் முருகு. அவனோடு காளிமுத்துவும் சேர்ந்து கொண்டு சிரித்தான்.

இருவரின் கேலி, கிண்டலான பேச்சு, சிங்காரத்துக்கு மிகுந்த கோபத்தை உண்டாக்கியது. அவன் தனக்குள் கர்விக் கொண்டான்.

''பொறுத்திருந்து பாருங்க'டா! எப்படி என்று உங்களுக்கே புரியும்!'' மிகுந்த வீராப் புடன் பேசினான். ஏதோ ஒருவித வெற்றிக் களிப் புடன் அவர்களைப் பார்த்தான்.

அவன் பார்வையும் பேச்சும் ஏதோ ஒரு விபரீதத்துக்கு ஆரம்பக் குறியாக முருகுக்குப்பட் டது. எதையும் ஆலோசிக்காமல் துணிந்து செய்யும் மனப்போக்கு சிங்காரத்துக்கு இயல் பான ஒன்று என்பது முருகுவுக்கு முன்பே தெரிந் ததுதான். அது அறிவானந்தத்துக்கு பாதகமாக அமைந்துவிடக் கூடாதே என்பதுதான் முருகு வுக்கு அப்போது இருந்த கவலை.

தன் நெருங்கிய நண்பன் சிங்காரத்தை மேலும் உற்சாகப்படுத்தும் வகையில் காளிமுத்து பேசத் தொடங்கினான்:

''ஒரு வேளை சிங்காரம் வெற்றி பெற் றாலும் பெறலாம். யார் கண்டது? வழக்கம் போல் இந்த தடவையும் பேச்சுப் போட்டிக்குச் சிங்காரம் பேர் கொடுத்திருக்கிறான்'னு நினைக் கிறேன்!''

இப்படிப் பேசினால் சிங்காரம் மகிழ்ச்சி அடைவான் என்பது காளிமுத்துவின் கணக்கு. சிங்காரம்மீது நம்பிக்கை காட்டி காளிமுத்து பேசத் தொடங்கினான். அதைக் கண்டு சிங்கா ரத்தின் முகம் மலர்ந்தது. ஆனால், இத்தகைய நம்பிக்கை எதுவுமே முருகுக்கு ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அவன் தன் அவநம்பிக்கையை மீண்டும் வெளிப்படுத்தினான்.

''சிங்காரமும் தான் எப்படியாவது, எதிலா வது பரிசு வாங்கணும்'னு பார்க்கிறான், முடிய வில்லையே! பெயர் கொடுத்தால் மட்டும் போதுமா? அதுக்கான திறமை வேண்டாமா? இன்னும் சொல்லப் போனால் தான் பரிசு வாங்குவதைவிட, அறிவானந்தம் பரிசு வாங்கக் கூடாது. அதுதான் அவன் கவலை எல்லாம்.

இப்படி முருகு பேசிச் சென்றது சிங்காரத் துக்குப் பிடிக்கவில்லை. வெறுப்புடன் முகத் தைச் சுழித்துப் பேசத் தொடங்கினான்.

'ஏன்'டா ஒரேயடியா 'அறிவானந்தப் பாட் டுப் பாடறே! இந்தத் தடவை எப்படியும் பேச்சுப் போட்டியிலே முதற் பரிசு வாங்கிக் காட்டு றேனா இல்லையான்னு பாருங்கடா! வர்றேன்.''

என்று வீராவேசத்துடன் கூறி, மிடுக்காக நடந்தான்.

அவன் அப்பால் நகர்ந்ததும் முருகு அவன் போக்கை விமர்சனம் செய்யலானான்.

''ஒவ்வொரு தடவையும் இந்தச் சவடாலுக்கு மட்டும் குறைச்சல் இல்லை. வெறும் வீறாப்பு, பரிசு வாங்குமா என்ன! அதுக்குத் திறமையும் முயற்சியும் வேண்டும். சிங்காரத்திடம் பொறாமையும் ஆசையும்தானே இருக்கு?''

''அறிவானந்தம் ஒவ்வொரு ஆண்டும் தவறாமல் பரிசு வாங்குறான். அதுக்கு அவன் தன்னை முழுமையாய் தயாராக்கிக்கிறான். நூலகத்திலிருந்து நிறைய நூல்களை எடுத்துப் படிக்கிறான். பொது அறிவை வளர்த்துக்கிறான். கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டிகள் மூலம் தான் திறமையை வெளிப்படுத்தறான். பரிசுகளைக் குவிக்கிறான். சிங்காரம் பாடப் புத்தகங்களையே ஒழுங்கா படிக்கிறது கிடையாது. இவன் எங்கே போட்டிலே கலந்து பரிசு வாங்குகிறது. சொல்ல முடியுமே தவிர சாதிக்க முடியாது. ''முருகு கூறிமுடிக்கும் முன் எதையோ நினைவு படுத்திக் கொண்டவனாக காளிமுத்து,

''இதைப் பார்க்கும்போது என் பாட்டி சொன்ன பழமொழிதான் என் நினைவுக்கு வருது.''

அதென்னடா பாட்டி சொன்ன பழமொழி'' முருகு தூண்டினான்.

''கூரையேறி கோழி பிடிக்க முடியாதவன், வானமேறி வைகுந்தம் போனானாம்'' இதைக் கேட்டுச் சிரித்த முருகு காளிமுத்தை நோக்கி,

''மிகப் பொருத்தமான பழமொழி. சிங்கா ரத்துக்கென உருவான பழமொழிடா''

முருகு கூறியதை காளிமுத்து ஏற்றுக் கொண் டான். அதோடு அவனும் ஒரு பழமொழியை எடுத்து விட்டான். ''ஆசை இருக்கு அரசன் ஆக, அதிர்ஷ்டம் இருக்கு மாடு மேய்க்க'னு எங்க தாத்தா அடிக்கடி பழமொழி சொல்வார். அது சிங்காரத்துக்குத்தான் பொருந் தும்'' என்றான்.

இருவரும் சிங்காரத்தின் போக்கை நினைந்து சிரித்தவர்களாகப் பிரிந்து சென் றார்கள்.

# 6

பள்ளிக்கூடம் முடிந்தது. மாணவர்கள் வகுப்பறைகளை விட்டு வெறியேறி, வீடு நோக்கிச் செல்லத் தொடங்கினர். வகுப்பு அறையை விட்டு வெளிவந்தான் சுந்தரம். மூன்றாவது நாளான இன்றும் அறிவானந்தம் பள்ளிக்கு வராதது ஏன் என்பதை அறிந்து கொள்ள மிகவும் ஆர்வப்பட்டான்.

இதுவரை பள்ளிக்கு அறிவானந்தம் தாமத மாக வந்திருக்கிறான். ஆனால், பள்ளிக்கே வரா மல் மட்டம் போட்டது கிடையாது. இப் போது அவனுக்கு என்ன ஆயிற்று? ஏன் வரவில்லை? யாரிடம் கேட்டுத் தெரிந்து கொள் வது? இப்படி யெல்லாம் எண்ணித் தவித்தான் சுந்தரம்.

'தொடர்ந்து மூன்று நாட்களாக அறிவானந்தம் பள்ளிக்கு வரவில்லை என்றால் அவனுக்குத் தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏதேனும் ஏற்பட்டிருக்க வேண்டும். அப்படி என்ன சூழ்நிலை?'' அவனுள் ஆர்வம் அதிகரித்துக் கொண்டே சென்றது. தொடர்ந்து பள்ளிக்கூடம் வராத காரணத்தை எப்படியாவது அறிந்த பின்பே வீடு திரும்புவது என்ற வைராக்கியத்துடன் நடையை ஓட்டினான்.

யாரைக் கேட்பது? யாரோடு தொடர்பு கொண்டால் சரியான தகவல் கிடைக்கும்? இந்தக் கேள்வி அவனுள் எழுந்தபோது அவனுக்கு முருகின் நினைவு வந்தது. முருகு, அறிவானந்தத்தின் நெருங்கிய நண்பன் ஆயிற்றே. அவனுக்குத் தெரியாமல் இருக்கமுடியாது. எனவே, அவனைப் பார்க்கக் கிளம்பினான்.

தேடிய முருகு எதிரே வந்தான். ஆவலோடு அவனை அணுகி அறிவானந்தம் பள்ளிக்கூடம் வராததுபற்றிக் கேட்டான்.

அறிவானந்தம் மருத்துவ மனையில் இருப்பதாக முருகு கூறினான். அதைக் கேட்ட சுந்தரம் பதைபதைத்தான்.

''அவனுக்கு என்ன'டா திடீர்'னு. உடம் புக்கு ஏதாவது? அவசரமாகக் கேட்டான் சுந்தரம்.

''அவனுக்கு ஒண்ணுமில்லே'டா' அவன் அம்மாவுக்குக் கடுமையான நோய்.'' முருகுவின் இந்தப் பதில் சுந்தரத்துக்கு ஆறுதல் அளித்தது. ஆனாலும் அவன் தாயின் நோய்பற்றி அறிந்து கொள்ள ஆவல் கொண்டான்.

''சென்ற வாரம் அவன் அம்மாவைப் பார்த் தேன். நல்லாத்தானே இருந்தாங்க?'' சுந்தரம் கேட்டான்.

நோய் அலாரம் அடிச்சுக்கிட்டா வரும்! திடீர்'னு வர்றதுதான் நோய். முந்தாநாள் மளி கைக் கடைக்குப் போய் சாமான் வாங்கிட்டு வந்திருக்காங்க. வரும்போதே திடீர்'னு வேர்த் திருக்கு. கொஞ்ச நேரத்திலே மயக்கம் போட்டு விழுந்திட்டாங்க. உடனே, ஆஸ்பத்திரியிலே சேர்த்திருக்காங்க. பல மணி நேரத்துக்கப்புறம் தான் நினைவு திரும்பிச்சாம். டாக்டர் எப் போதும் கூடவே இருந்து வைத்தியம் பார்க்கி றாராம். அறிவானந்தம் படுக்கை அருகிலேயே இருந்து அம்மாவைக் கவனிச்சுக்கிறான்.''

முருகு கூறியதைக் கேட்டபோது அறிவா னந்தம் மீது பரிவும் பச்சாதாபமும் ஏற்பட்டது. அவனுக்கு ஏற்பட்ட சோதனையை எண்ணி மனம் வருந்தினான்.

''அறிவானந்தம் ரொம்பப் பாவம்'டா! அவ னுக்கு உதவி செய்ய யாருமே இல்லை.'' அவன் வெளிப்படுத்திய அனுதாப உணர்வு வார்த்தை களாக வெளிவந்தன.

''ஆமா'டா. அறிவானந்தத்தின் அம்மா. ரொம்ப நல்லவங்கடா. யாருடைய துணையோ வசதியோ இல்லாமல் பலகாரம் சுட்டு விற்று வாழ்க்கை நடத்துறாங்க. அறிவானந்தத்தின் அப்பா இறந்து போய்விட்டாலும் அறிவானந்தத் துக்கு எந்தக் குறையும் வராம அவனை வளர்க்க றாங்க. அவன் படிச்சு பெரிய வேலைக்குப் போய் நிறைய சம்பாதித்து, தன்னைச் செம்மை யாக வைத்துக் காப்பாற்றுவான் என்ற நம்பிக்கை யோடு இருக்காங்க. அறிவானந்தமும் அவன் நம்பிக்கைக்கேற்ப நன்றாகப் படித்து வருகிறான். இப்ப அவன் நிலை பரிதாபமாயிருக்கே?''

சுந்தரத்தின் அனுதாபத்துக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் முருகு மேலும் கூறினான்:

''டாக்டர் ரொம்ப நல்லவர்'டா. அவன் மேலே ரொம்பப் பிரியமா இருக்கார். ரொம்ப அக்கறையோட அவன் அம்மாவுக்கு வைத்தியம் பார்க்கிறார்.'

'டாக்டர்' என்று கூறியவுடன் ஏதோ நினைவுக்கு வந்தவன்போல் 'டாக்டர் நாதன்' தானே அவர்?' என்று கேட்டான் சுந்தரம் 'ஆமா' என்று முருகு சொன்னவுடன் பெரிதும் மகிழ்ந்தவனாகக் காட்சியளித்தான்.

மேலும் சுந்தரம் தொடர்ந்தான்:

''அந்த டாக்டர்தான் நம்ப பள்ளிக்கூட சிறு சேமிப்பு வார விழாவுக்குத் தலைமை வகிக்கப் போகிறார். அவர்தான் சிறந்த சேமிப்பாளனுக்கு பரிசும் கொடுக்கப் போகிறார்.'' என்று காளிமுத்து கூட கூறினான் என்று சுந்தரம் சொல்லி முடிக்கவில்லை. அதற்குள் காளிமுத்து மூச்சு இறைக்க வேகமாக அங்கு வந்து சேர்ந்தான்.

''சுந்தரம்! சிங்காரத்தை எங்கேயாவது பார்த்தியா? அவன் அப்பா அவசரமா அவனை தேடுகிறார்'' அவன் பரபரப்போடு கேட்டான்.

''நாங்க அவனைப் பார்க்கலியே! அவன் அப்பா ஏன்'டா அவனைத் தேடுகிறார்? அதுவும் அவசரமா?'' ஏதும் புரியாத சுந்தரம் காளிமுத்துவின் முகத்தைப் பார்த்தான்.

'ஏன்'னு தெரியலே. ஆனால், ரொம்பக் கோபமா இருக்கார்'னு மட்டும் புரிஞ்சுது. பள்ளிக்கூடம், பிளே கிரௌண்ட், மரத்தடி இங்கே எல்லாம் தேடிப் போனார்...'' அவன் சொல்லி முடிக்குமுன் முருகு குறுக்கிட்டான்.

''பள்ளியிலே இல்லேன்னா ஓட்டல், சினிமாக் கொட்டகை இங்கேயெல்லாம் தேடினா கிடைப்பான்!'. என்று கிண்டலாகக் கூறினான்.

இதைக் கேட்டு மற்றவர்களும் சிரித்தார்கள்.

# 7

மருத்துவமனையின் நீண்ட கூடத்தில் வரிசை வரிசையாகப் படுக்கைகள். அவற்றில் நோயாளிகள் படுத்தும் உட்கார்ந்து கொண்டும் இருந்தார்கள். அவர்கட்கு அருகில் உறவுக்காரர்கள் நின்று உதவி செய்தும் ஆறுதல் கூறிக் கொண்டும் இருந்தனர். அங்குமிங்கும் நர்ஸ்கள் நடமாடிக் கொண்டிருந்தனர். அப் போது வருகையாளர்கள் வந்து போகும் நேர மாக இருந்ததால் கூடம் ஓரளவு கூட்டத்தோடு காணப்பட்டது. அக்கூடத்தை அடுத்திருந்த அறையிலிருந்த படுக்கையில் அறிவானந்தத்தின் தாயார் கண்களை மூடியபடி படுத்திருந்தார். அவர் உடலைப் பரிசோதித்த டாக்டர் வெளியே வந்தார். கவலை தோய்ந்த முகத்துடன் அறிவா னந்தம் அறைக்கு வெளியே நின்றிருந்தான்.

டாக்டர் வெளியே வருவதைக் கண்டவுடன் கைகூப்பி வணங்கினான். அவர் அருகில் சென்று தழதழத்த குரலில் கேட்டான்:

''டாக்டர் சார்! எங்கம்மாவுக்கு இப்ப எப் படி இருக்கு சார்?''

அறிவானந்தத்தின் கவலையை டாக்டர் புரிந்து கொண்டார். வாஞ்சையுடன் அவன் தலையைத் தடவினார். நம்பிக்கையூட்டும் வகை யில் புன்முறுவல் பூத்தார். அவன் தோளில் கை வைத்தபடி கூறினார்:

''இனிமேல் உங்கம்மாவுக்கு எந்த ஆபத் தும் இல்லை. விரைவில் சுகமாக எழுந்துவி டுவார். நீ மகிழ்ச்சியாக இருக்க வேண்டும், தெரி யுமா?'' என்று கூறியவாறு அன்புடன் அவன் கன்னத்தில் மெதுவாகத் தட்டினார்.

''எங்கம்மா உயிரை கடவுள்போல் காப்பாத் திட்டீங்க சார்! உங்களுக்கு எப்படி நன்றி சொல்ற துன்னே தெரியலே, சார்!'' கண்களில் நீர்மல்க கரங்கூப்பி வணங்கியபடி கூறினான். கண் கலங்கி, நன்றி கூறும் சிறுவனின் செயல் டாக் டரைப் பெரிதும் இளகச் செய்துவிட்டது.

''தம்பி! என்னைவிட உன் அம்மாவைக் காப்பாத்தினது நீதான்'னு சொல்லணும். தக்க சமயத்திலே விலையுயர்ந்த மருந்துகளை வாங்கிக் கொடுத்தே. அதனாலே உன் அம்மா பிழைச்சுட்டாங்க. உன் முன்யோசனைத் தனமான சேமிப்பு விஷயம் என்னைப் புல்லரிக்க வைக்குது. உன்னைப் போல எல்ல மாணவர்களுக்கும் முன் யோசனையும் எதிர்கால நோக்கும் இருந்தால் போதும். நம்ம நாடு எதிர்காலத்திலே எவ்வளவோ முன்னேறிடும். ஆமா, அது என்ன கையிலே காகிதங்கள்? தேர்வுத் தாளா?''

டாக்டரிடம் காகிதங்களை நீட்டியபடியே அறிவானந்தன் கூறினான்:

''நாளைக்குப் பள்ளிக்கூடத்தில் சிறு சேமிப்பு விழா நடக்கப் போகுது. சார்! அப்போது நடக்கும் பேச்சுப் போட்டியிலே கலந்துக்கப் பெயர் கொடுத்திருக்கேன், சார்! அதுக்காகப் பேச வேண்டியதை ஒருமுறை எழுதிப் பார்த்தேன், சார்! ஆனால், அம்மா இருக்கிற இந்த நிலையிலே, நான் பேச்சுப் போட்டிக்குப் போய் கலந்துக்க முடியாது, சார்!''

அறிவானந்தம் தன் தாய்மீது வைத்திருந்த பற்றும் பாசமும் டாக்டரை வெகுவாகக் கவர்ந்

தது. அதே சமயம் போட்டியில் கலந்து கொள்ள பேரார்வம் கொண்டிருந்தும், இயலாமைக்கு வருந்தும் அவன் நிலைமை கண்டு டாக்டரின் மனம் வருந்தியது. அவனுக்குத் தேறுதல் கூறிய தோடு அவனது கடமையையும் பொறுப்பையும் நினைவூட்டினார்.

''அறிவானந்தம்! பேச்சுப் போட்டி போனால் போகட்டும். அடுத்த தடவை கலந்து கொண்டால் போகிறது. நீ இன்னும் இரண்டு மூன்று நாளைக்கு நீ உன் அம்மா படுக்கை அருகிலேயே இருக்கணும். எங்கேயும் போகக் கூடாது. ஆமா, போட்டிக்கு அப்படி என்னதான் எழுதியிருக்கே? இங்கே கொடு, நான் படித்துப் பார்க்கிறேன்!'' என்று கூறிய டாக்டர் அறிவானந்தம் தந்த தாள்களைப் பிரித்துப் படிக்கலானார். படிக்கும் போது அவர் முகம் மகிழ்ச்சியால் விரிந்தது. வியப்பில் பிரகாசித்தது. சத்தமில்லாமல் மெதுவாகப் படித்தவர், மகிழ்ச்சி மிகுதியால் ''நாமிருக்கும் காலமெல்லாம் நமக்கு நன்மை தரும்'' என்ற வாசகத்தைச் சத்தமிட்டுப் படித்தார்.

சிறிது நேரம் அறிவானந்தத்தையே மகிழ்வோடும் வியப்போடும் பார்த்தார்.

''உம்! பரவாயில்லையே, ரொம்ப நல்லா எழுதியிருக்கியே. இந்தா இதை நீயே வச்சுக்கோ. அம்மாவை விட்டு நகரக் கூடாது. ஏதவாதுன்னா உடனே வந்து சொல்லணும்'' என்று கூறித் தாள்களைத் தந்துவிட்டு நகர்ந்தார்.

தன்னை அன்போடும் வாஞ்சையோடும் தட்டிக் கொடுத்த டாக்டரின் அன்பை நினைக்கும் போது அறிவானந்தத்துக்குப் பெருமையாகவும் பூரிப்பாகவும் இருந்தது. சிறிது நேரம் டாக்டர் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தான். டாக்டர் உருவம் பார்வையிலிருந்து மறைந்தபின் தன் தாயார் படுத்திருந்த படுக்கையை நோக்கி நகர்ந்தான்.

அறிவானந்தத்தின் தாயார் நோயாளியாகப் படுத்த படுக்கையாக இருப்பதாலும் அவரை அருகில் இருந்து கண்ணும் கருத்துமாக கவனித்துக் கொள்ள வேண்டியிருப்பதாலும் அறிவானந்தம் போட்டி எதிலும் கலந்து கொள்ள முடியாது - மாட்டான் என்ற செய்தி எப்படியோ காட்டுத் தீ போல் பள்ளியெங்கும் பரவிட்டது. இது முருகுவுக்கும் மற்ற நெருங்கிய நண்பர்களுக்கும் மிகுந்த மன வருத்தத்தைக் கொடுத்தது.

# 8

ஆனால் அந்தச் செய்தியைக் கேட்டதிலிருந்து சிங்காரத்துக்கு ஒரே மகிழ்ச்சி. அறிவானந்தம் போட்டியில் கலந்து கொள்ள முடியாது என்பதுதான் அந்த மகிழ்ச்சியான செய்தி. இதை யாரிடமாவது சொல்லி, தன் மகிழ்வைப் பகிர்ந்து கொள்ள விரும்பினான். அப்போது அங்கு வந்து சேர்ந்தான் சேகர். சேகர் அவன் வகுப்பில் படித்து வருபவன். அவனிடம் மகிழ்ச்சி பொங்க, ''டேய் சேகர்! உனக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி சொல்லப் போறேன்!''

செய்தி என்ன என்று சொல்லாமலே பீடிகை போட்டான் சிங்காரம்.

''என்னடா, சிங்காரம்! என்னை ஓட்டலுக்கோ சினிமாவுக்கோ கூட்டிட்டுப் போகப் போறியா? அதைத்தானே சொல்லப் போறே'' சிங்காரத்தின் இயல்பு அறிந்த சேகர் அவசரப் பட்டுக் கேட்டான்.

''அடுத்தவன் பாக்கெட் காலியாவதுதான் உனக்குச் சந்தோஷமாக்கும்! டேய்! நம்ம அறிவானந்தம் ஆஸ்பத்திரியிலே இருக்கானாம்!''

இதைக் கேட்டவுடன் சேகர் பதறினான். அவனுக்கும் அறிவானந்தம் நண்பன்தான். அவன் மீது சேகருக்குப் பிரியம் மட்டுமல்ல; மதிப்பே உண்டு. அறிவானந்தத்தின் பண்பா டான போக்கு சேகருக்கு மிகவும் பிடிக்கும். எனவே, சற்று பதற்றத்துடனேயே கேட்டான் :

''அவனுக்கு என்னடா உடம்புக்கு? நல்லாத் தானே இருந்தான்?''

''அவனுக்கு ஒண்ணுமில்லேடா. அவன் அம்மாவுக்குத் திடீர்'னு நோய் வந்து ஆஸ்பத்தி ரியில் இருக்காங்களாம். அவனும் அவங்க கூட வே இருக்கானாம்!'' மகிழ்ச்சியாகக் கூறினான் சிங்காரம்.

இதைக் கேட்டபோது சேகருக்கு ஒன்றும் புரியவில்லை. மீண்டும் சிங்காரத்தை நோக்கிக் கேட்டான்:

''என்னடா, இது! வருத்தப்பட வேண்டிய செய்தியை 'சந்தோஷ செய்தி'யாகச் சொல்றீயே?''

''உனக்கு வருத்தமான செய்தியாக இருக் கலாம். ஆனால், எனக்கு இது மகிழ்ச்சி தரும் செய்திதானே! நாளைக்குப் பேச்சுப் போட்டி

யிலே அறிவானந்தம் கலந்துக்க முடியாது! அத னாலே பரிசும் அவனுக்குக் கிடைக்காது!''

சிங்காரத்தின் பேச்சு சேகருக்கு அதிர்ச்சி யாக இருந்தது.

''டேய், சிங்காரம்! நீ, அப்படி நினைக்கி றதே தப்பு'டா. ஒருவேளை நாளைக்கு அவன் அம்மா நோய் சரி:யாகி, அவன் பேச்சுப் போட்டி யிலே கலந்து கொண்டால்?''

அனுமானத்துடன் சேகர் கூறினான். அப்படி அவன் கூறியது சிங்காரத்துக்குப் பிடிக்கவில்லை. என்றாலும் அவன் அதை வெளிக்காட்டிக் கொள் ளவில்லை.

''அப்போ, வாடா! நேரிலேயே போய் நிலைமையைத் தெரிஞ்சுக்கலாம்.''

சிங்காரத்தின் அழைப்பை ஏற்றுக் கொண்ட சேகர் ''எனக்குக்கூட அவங்க அம்மாவையும் அவனையும் பார்க்கணும்போல் இருக்குடா, வா, போய்ப் பார்க்கலாம்,'' என்று கூறினான்.

இருவரும் மருத்துவமனை நோக்கி நடந் தார்கள்.

# 9

சேகரும் சிங்காரமும் மருத்துவமனையை அடைந்தனர். அப்போது அறிவானந்தம் அவன் அம்மாவுக்கு மருந்து கொடுத்துக் கொண்டிருந்தான். அவனைக் கண்டபோது கவலை தோய்த்த முகத்துடன் பேசினான் சேகர் :

'அறிவானந்தம்! இப்போ, அம்மாவுக்கு எப்படி இருக்கு?'

'இப்போ, பரவாயில்லை சேகர்! அபாய கட்டத்தைத் தாண்டிட்டதாக டாக்டர் சொன்னார்.''

தழதழத்த குரலில் பதில் அளித்தான் அறிவானந்தம்.

''உனக்கு ரொம்பக் கஷ்டம்'டா. நாளைக்குப் பேச்சுப் போட்டிக்குக் கூட உன்னாலே வர முடியாது. இல்லையா?'' அறிவானந்தத்தை நோக்கி ஆதங்கத்தோடு கேட்டான் சிங்காரம். அவன் பதிலைத் தெரிந்து கொள்ள அவன் உள்ளம் துடித்தது. அறிவானந்தத்தின் முகத்தை ஆவலோடு நோக்கினான் சிங்காரம்.



'ஆமா, சிங்காரம்! அம்மா பக்கத்திலேயே கண்டிப்பா இருக்கணும்'னு டாக்டர் சொல்லியிருக்கிறார். இதோ பார்! இதிலே நாளை பேசப் போறதைக்கூட ஒரு தடவை எழுதிப் பார்த்தேன். ஆனால் போட்டியிலே கலந்துக்க முடியாமப் போச்சு!' பரவாயில்லை. அம்மாவைவிடப் பேச்சுப் போட்டியா முக்கியம்?

ஏக்கப் பெருமூச்சோடு சொல்லி முடித்தான் அறிவானந்தம்.

சிங்காரத்திடம் காட்டிய பேச்சுத் தாளை அருகே மருந்துகள் வைக்கப்பட்டிருந்த மேசை மீது வைத்தான் அறிவானந்தம். அதைக் கவனித்துக் கொண்டிருந்தான் சிங்காரம். அவனிடம் பேசிக் கொண்டிருந்தபோதே, அவன் உள் மனம் வேலை செய்தது. அறிவானந்தத்துக்குத் தெரியாமல் அதைத் தட்டிச் செல்லத் திட்டமிட்டான். அறிவானந்தம் பேசிக் கொண்டிருந்தபோது நைசாக அத் தாள்களை எடுத்துக் கொண்டான். யாருக்கும் தெரியாமல் பாக்கெட்டில் திணித்துக் கொண்டான், சேகரோடு சேர்ந்து அறிவானந்தத்திடம் சொல்லிவிட்டு வெளியேறினான். மா பெரும் காரியத்தைச் சாதித்துவிட்டது போன்ற பெருமிதம் அவனுக்கு ஏற்பட்டது. கூடவே, திருட்டு வெளிப்பட்டால் என்ன அவமானம் ஏற்படுமோ என்ற திகிலும் ஏற்பட்டது. இருந்தாலும் ஆசைக்கு வெட்கமில்லையே! ஆசை அச்ச உணர்வை விஞ்சி நின்றது.

# 10

அன்று சிங்காரத்துக்கு மகிழ்ச்சி தாள வில்லை. இது நாள் வரை பரிசுக்கு ஏங்கிய ஏக்கம் தீரப் போகிறதே என்ற பெருமை. பல நாள் கனவு நனவாகப் போகும் பெருமிதம். அந்த இனிய நேரத்தை ஆவலோடு எதிர் நோக்கிக் கொண்டிருந்தான். தன் போட்டிப் பேச்சை எல்லோரும் பாராட்டுவார்கள் என்பதை எண்ணியபோது மகிழ்ச்சி பொங்கியது. அவனறி யாமல் அவன் உதடுகள் விரிந்தன. மகிழ்ச்சிப் பெருக்கு வெளிப்பட்டது. மனப்பாடம் செய்தி ருந்த பேச்சை தனக்குத்தானே சொல்லிக் கொண் டான். வெற்றியை நிச்சயித்துக் கொண்டான்.

சிங்காரத்தின் மகிழ்ச்சி நிலை அவன் நண் பர்களுக்கு விநோதமாகப்பட்டது. அவன் மகிழ்ச் சிக்குக் காரணம் கண்டறிய அவன் நண்பன் சந்திரன் முனைந்தான்.

''என்ன'டா சிங்காரம்! இன்னிக்கு ரொம்பக் குஷியா இருக்கே? என்ன விஷயம்? இன்னிக்கு உங்க அம்மாவிடமிருந்து நிறைய காசு கறந் துட்டு வந்துட்டியா?'' சிங்காரத்தை நன்றாகத் தெரிந்திருந்த நண்பன் சந்திரன் கேட்டான்.

'இப்படி யாராவது கேட்க மாட்டார்களா?' என்று ஏங்கியவன்போல் தன் சட்டைக் காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டான். அவனை நோக்கிப் பெருமையான ஒரு பார்வை பார்த்தான்.

''நாளைக்கு நம்ம பள்ளிக்கூட ஹீரோ, நான் தான். இதை நாளைய விழாவிலிருந்து புரிஞ் சுக்குவே. அறிவானந்தத்தின் பரிசு ஆதிக்கம் நாளைக்குத் தகர்ந்து போகும்!''

சிங்காரத்தின் திடீர் அறிவிப்புக் கேட்ட சந்திரன் திகைத்துவிட்டான். இவனுக்கு எப்படி இந்தத் 'திடீர்' வாழ்வு வந்தது என அதிசயித் தான். 'இவன் பேசுவதன் பொருள் என்னவாக இருக்கும்?' எனக் குழம்பினான்.

''என்ன, சிங்காரம்! என்னவோ போலப் பேசறே? நீ பேசறது எனக்குச் சரியாப் புரிய லியே?''

சந்திரனின் குழப்பத்தைத் தெளிவாக்கி னான் சிங்காரம்.

''புரியும்படியாச் சொல்றேன், கேள். நாளைக்கு நம்ம பள்ளிக் கூடத்திலே 'சிறு சேமிப்பு வார விழா' நடக்கப் போகுது. அதிலே பள்ளிச் சேமிப்புக் கணக்கிலே அதிகமா பணம் போடற மாணவனுக்குப் பரிசு தந்து பாராட்டு வாங்க, அதோடு சிறுசேமிப்புப் பேச்சுப் போட் டியும் நடக்கும். இந்த இரண்டு பரிசுகளையும் இது வரையிலும், ஆண்டு தவறாம அந்த அன்னக்காவடி அறிவானந்தம் வாங்கி வந்தான். இப்போது அவன் பரிசு ஆதிக்கத்துக்கு முற்றுப் புள்ளி வச்சாச்சு!'' என்று வெற்றிப் புன்னகை யோடு கூறி முடித்தான் சிங்காரம்.

சந்திரனுக்கு ஒரு பகுதி புரிந்தது. மறு பகுதி தெளிவாகப் புரியவில்லை. புதிராக இருந்தது. மேலும், புதிரைப் புரிந்து கொள்ளும் வகையில் கேள்வி கேட்கலானான்.

''சிங்காரம்! நீ சொல்வது அதிசயமாயிருக் கே! அவனுக்கு வேணும்'னா பரிசு கிடைக்காமப் போகலாம். ஆனால், அந்தப் பரிசு'ங்க உனக்கு எப்படிக் கிடைக்க முடியும்? நீ தான் கிடைக்கிற

காசையெல்லாம் தின்று தீர்த்திடறீயே! பேச்சுப் போட்டிக்குன்னு வந்து நிற்பியே தவிர, பேச மாட்டியே! பேந்தப் பேந்த விழிப்பே!! அது தானே இதுவரை நடந்தது!''

சிங்காரத்தின் கடந்த கால நடைமுறை களைச் சுட்டிக் காட்டிப் பேசினான் சந்திரன்.

''அதெல்லாம் உனக்கு ஒண்ணும் புரியாது! நாளைக்கு நான் பரிசுகளை வாங்குவேன். அப் போ, உன் தேங்காய் மண்டைக்குத் தெளிவாகப் புரியும்! நான் வர்றேன்,'' எனப் புதிருக்கு விடை கூறாமலே நடையைக் கட்டினான் சிங்காரம்.

சிங்காரத்தின் பேச்சும் போக்கும் சந்திர னுக்கு மேலும் குழப்பத்தையே ஏற்படுத்தியது. எந்த ஆதாரத்தின் அடிப்படையில் இவ்வளவு நம்பிக்கையோடு பேசிவிட்டுப் போகிறான். 'ஜீ பூம்பா' என்று ஏதேனும் மாய மந்திரம் செய்து பரிசுகளைப் பெறப் போகிறானா, என்ன? ஏதும் புலப்படாத நிலையில் சந்திரன் மனதில் ஒரு கருத்து மட்டும் உறுதியாகத் தலை தூக்கி நின் றது. அதுதான் சிங்காரத்தின் போக்கால் ஏதோ விபரீதம் நாளை நடக்கப் போகிறது என்பது.

# 11

சுந்தரம் பார்க்கும்போது சிங்காரம் பள்ளிக்கூட மைதானத்தில் இருந்தான். எதையோ கையில் பிடித்துக் கொண்டு முன்னும் பின்னுமாக நடந்து கொண்டிருந்தான். அவன் தனியாகப் பள்ளி மைதானத்திலிருந்து கொண்டு படிப்பதை இதற்குமுன் பார்த்ததில்லை. ஆச்சரியத்தோடு அவனை நோக்கி சுந்தரம் சென்றான்.

''என்ன சிங்காரம்! இங்கே வந்து படிச்சிட்டிருக்கே? எதையோ மனப்பாடம் பண்றே போலிருக்கு? தேர்வுக்கு இப்பவே படிக்க ஆரம்பிச்சுட்டியா? அதிசயமா இருக்கே?''

இதைக் கேட்ட சிங்காரத்துக்குச் சிரிப்பாக இருந்தது. ''சுந்தரம், நீ ஒரு பரீட்சை நோயாளி' டா! இன்னிக்கு மாலை நடக்கப் போகும்

பேச்சுப் போட்டிக்கு என்னைத் தயாராக்கிக்கிட் டிருக்கேன். வெளுத்து வாங்கப் போறேன். அறி வானந்தம் பரிசு சாம்ராஜ்ஜியத்தைத் தவிடு பொடியாக்கப் போறேன்!!'' இறுமாப்போடு சிங்காரம் பேசினான்.

இதைக் கேட்ட சுந்தரம் வியப்பால் திகைத் துவிட்டான். எங்கிருந்து இவ்வளவு நம்பிக்கை இவனுக்கு வந்தது? அது மர்மமாகவே இருந்தது. அறிவானந்தத்தை நினைத்தே உருகி உருக்கு லைந்து விடுவான்போல் தோன்றியது.

''தான்தோன்றித்தனமா செலவு செய்யற உனக்கு, சிறு சேமிப்புக்காகப் பரிசா? அப்படிக் கிடைச்சா, நான் மட்டுமில்லே, இந்தப் பூமியே தாங்காதப்பா!'' என்று எள்ளி நகையாடினான். இதை ஒரு பொருட்டாகச் சிங்காரம் கருத வில்லை.

''உனக்கெங்கடா அதெல்லாம் புரியப் போ வுது? அவசரப்படாம, பொருத்திருந்து பார்!'' என்று சிங்காரம் கூறி, கையிலிருந்த தாளை சுந்த ரத்துக்கு நேராக நீட்டினான். அதிலிருந்த கையெ ழுத்தைப் பார்த்த சுந்தரம் திடுக்கிட்டான்.

''சிங்காரம்! நீ படிக்கிற தாள்'லே இருக்கிற கையெழுத்து அறிவானந்தம் கையெழுத்துப் போல இருக்கே!'' என்று கேட்டான்.

சுந்தரம் அவ்வாறு கேட்டது சிங்காரத் துக்குப் பிடிக்கவில்லை. அவனுக்குச் சற்று ஆத்தி ரமாகக் கூட இருந்தது.

''ஆமா! ஊர்லே இருக்கிறவங்க கையெழுத் தெல்லாம் இவருக்குத்தானே ரொம்பத் தெரியும்! பேசாமப் போடா!'' என வெறுப்பாகக் கூறி அவன்மீது எரிந்து விழுந்தான்.

சிங்காரம் ஆத்திரமும் கோபமுமாக இருந் தான். அவனோடு இனிப் பேசிப் பயனில்லை என்பதை உணர்ந்தவனாக, ''நீ எரிஞ்சு விழுகிறதி லேயிருந்தே, என்னமோ நடந்துக்கிட்டிருக் குன்னு புரியுது. நான் வர்றேன்,'' என்று முணுமு ணுத்தபடியே விரைந்து நடந்தான்.

சிங்காரம் தொடர்ந்து மனப்பாடம் செய் வதில் மும்முரமாக ஈடுபட்டான்.

# 12

அன்று சிறுசேமிப்பு விழா. பள்ளிக் கூடத்தின் ஹால் முழுமையும் அலங் காரத்தால் விழாக் கோலம் பூண்டிருந்தது. மேடை யில் போடப்பட்டிருந்த மேசை பூ வேலை செய்யப்பட்ட வண்ணத் துணியால் போர்த்தப் பட்டிருந்தது. அதன்மீது மலர் ஜாடிகள் வைக்கப் பட்டிருந்தன. விழா மேடை யில் அலங்கார நாற்காலிகள் விழா பிரமுகர்களுக்காகப் போடப் பட்டிருந்தன. விழா தொடங்க இன்னும் சிறிது நேரமே இருந்தது.

பள்ளிக்கூட ஹாலில் மாணவர்கள் எல்லாம் குழுமி இருந்தனர். இறை வணக்கத்துடன் விழா தொடங்கியது. தலைமை ஆசிரியர் வரவேற் புரை யாற்றியபின், பேச்சுப் போட்டி தொடங்கி யது. பேச்சுப் போட்டியில் கலந்து கொண்ட

மாணவர்கள் ஒவ்வொருவராக அழைக்கப்பட் டனர். போட்டியிட்ட மாணவர்கள் பேசிய பின் அவர்தம் இருக்கையில் திரும்ப வந்து அமர்ந் தனர்.

'இப்போது சிங்காரம் என்ற மாணவர் பேசு வார்' என்ற அறிவிப்பைத் தொடர்ந்து சிங்காரம் மேடை ஏறினான்.

பேசுவதற்கு மேடை நோக்கிச் சிங்காரம் உற்சாகமாக வந்தான். அதைக் கண்ட அவன் நண் பர்களுக்கு வியப்பாக இருந்தது. என்ன பேசப் போகிறான் என்பதைக் காதைத் தீட்டிக் கொண்டு கவனித்தனர்.

மேடை மீது சிங்காரம் ஏறி நின்றான். சுற்று முற்றும் தன் பார்வையைச் செலுத்தினான். பின்பு பேசத் தொடங்கினான் :

''வணக்கம்! நாம் இருக்கும் காலமெல்லாம் நமக்கு நன்மை தரும் திட்டமே சிறுசேமிப்புத் திட்டம். கால வெள்ளத்தை வெற்றியுடன் நீந்திக் கடக்க உதவும் உயிர் காப்புப் படகு போன்றது சிறுசேமிப்புத் திட்டம். துன்பப்படும் காலத்தில் இனிது கைகொடுக்கும் உயிர் நண்பன் போன் றது. காலம் நில்லாதது. கடந்து போன காலம்

திரும்ப வருவதில்லை. நாளை என்ன நடக்கும் என்பது யாருக்கும் தெரியாது. சம்பாதிக்க இய லாத வயதான காலத்தில் சுகமாக வாழ இளமை யிலிருந்தே சேமிக்க வேண்டும். 'காற்றுள்ள போதே தூற்றிக் கொள்' என்பது பழமொழி.

''மனிதனைவிட குறைந்த அறிவு படைத்த உயிரினங்களெல்லாம் தவறாமல் சேமித்து வைத் துப் பயனடைகின்றன. மழைக் காலத்துக்கு வேண்டும் என்று வெயில் காலத்தில் இறையைத் தேடி சேமிக்கின்றது எறும்பு. அதேபோல் தேனீ, தேனைச் சேர்த்து வைத்துப் பயனடைகின்றது. ஆனால் ஆறறிவு படைத்த மனிதன் மட்டும் சம்பாதிக்கும் காலத்தில், வருங்காலத்திற்கு வேண்டுமே எனச் சேமிப்பதில்லை. வருமானம் இல்லாத வயதான காலத்தில், தடி ஊன்றி தள்ளாடும் பருவத்தில் அமைதியோடும் மகிழ்ச் சியோடும் வாழ வழி இன்றி வருந்தி நிற்கிறான். எதிர்கால வாழ்வை எண்ணிப் பார்ப்பதில்லை. இளமையில் சேமிப்பு உணர்வு இருப்பதில்லை. ஆடம்பரமாக வாழ்ந்துவிட்டு முதிய வயதில் கையேந்தி பிச்சை கேட்கும் கேவல நிலைக்கு ஆளாகிறான். அந்த நிலை ஏற்படாமல் இருக்க நாமெல்லாம் இளம் வயதிலிருந்தே - இன்றுமு தலே சிறுகச் சிறுக சேமிக்க வேண்டும்.

''இன்றையச் சேமிப்பே நாளையப் பாது காப்பு. வருங்கால நல்வாழ்வுக்கு வளமான அடிப் படை. மாணவ மாணவிகள் அவ்வப்போது கைச் செலவுக்குக் கிடைக்கும் காசுகளுக்குக் கண்ட கண்ட பொருள்களையோ, தின்பண்டங்களை யோ வாங்கித் தின்று உடம்பைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது! அவைகளைச் சேமித்து வைக்க முயல வேண்டும்!''

இப்பேச்சைக் கேட்டு மாணவர்கள் பல மாகக் கைதட்டினார்கள். ஆனால், அவனுடைய நண்பர்கட்கு ஒரே வியப்பு. 'என்னடா இது! அதி சயமா இருக்கு! தனக்குத்தானே அறிவுரை சொல் லிக்கிறானா? இல்லே, திட்டிக்கிறானா?' என கச முசவென்று ஒருவருக்கொருவர் பேசிக் கொண் டார்கள்.

சிங்காரத்தின் நெருங்கிய நண்பனான காளி முத்துவுக்கு இந்தப் பேச்ஷைச நம்பவே முடிய வில்லை. 'இவனுக்கு எப்படி'டா இப்படி எல் லாம் பேசத் தெரிந்தது!' என மெல்லிய குரலில் தனக்குத்தானே கேட்டுக் கொண்டான்.

சிங்காரம் தொடர்ந்து பேசினான் :

''சிறு நீரோடையானது நீர்ப் பெருக்கால் அருவியாகிறது. அதுவே மேலும் நீர் பெருகி நதியாகப் பெருக்கெடுக்கிறது. அதே போன்று சிறுகச் சிறுக சேமிக்கும் பணம் நாளடைவில் பெருந்தொகையாக வளர்ந்து நமக்குப் பெரும் நன்மையைக் கொடுக்கும்.

'வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்'

என்றார் வள்ளுவர்.

''வெள்ளம் வருமுன் அணைபோட வேண்டும். அதைப் போல துன்பம் வருமுன்னர் சேமிக்க வேண்டும். அப்படிச் சேமிக்கத் தவறியவன் வாழ்க்கை, வைக்கோற் போரில் நெருப்புப் பொறி பட்டதுபோல் பாழாகிவிடும். எனவே, வருங்கால வாழ்வுக்கு ஒளியூட்டும் சேமிப்புப் பழக்கத்தை மாணவர்களாகிய நாம் இளமை முதலே-ஏன்-இன்று முதலே பின்பற்ற வேண்டும்!''

சிங்காரத்தின் பேச்சு அவையோரைத் திகைப்பில் ஆழ்த்தியது. மகிழ்ச்சிப் பெருக்கால் கை தட்டி ஆரவாரித்தனர்.

கைத்தட்டல் சத்தம் கேட்டு மகிழ்ச்சியால் திக்குமுக்காடினான் சிங்காரம்.

இறுதியாகத் தலைமை வகித்த டாக்டர் நாதன் எழுந்தார். அவையோரை நோட்டமிட்டார். குறிப்பாக இறுதியாகப் பேசிய சிங்காரத்தை ஒருமுறை ஏறிட்டு நோக்கினார். பின் பேசத் தொடங்கினார்.

''இன்றையப் பேச்சுப் போட்டியில், இங்கு பேசிய எல்லா மாணவர்களுமே சிறு சேமிப்புப் பற்றி வெகு அழகாகப் பேசினார்கள். சிறுதுளி பெரு வெள்ளமாவதுபோல், சின்னஞ்சிறு சேமிப்புக் கூட, நாளடைவில் பெருந்தொகையாக உருவெடுக்க முடியும்.

''பாரதப் பிரதமராக இருந்த அமரர் லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் 'வீட்டு நலனுக்காகவும் நாட்டு நலனுக்காகவும் ஒவ்வொரு இந்தியனும் 3 பைசா நாள்தோறும் சேமிக்க வேண்டும்' என்றார். அப்படிச் சேமித்தால் என்ன ஆகும்?

''ஒவ்வொரு இந்தியனும் ஒரு நாளைக்கு 3 பைசா வீதம் சேமித்தால் 65 கோடி இந்தியரின்

சேமிப்பு 195 கோடி காசுகள் ஆகும். 30 நாட்க ளுக்குச் சேர்த்தால் 5,880 கோடி காசுகள் ஆகும். 12 மாதங்களின் அதாவது ஒரு ஆண்டின் 69,980 கோடி காசுகள் ஆகும். அதாவது நாளைக்கு 3 காசு வீதம் சேமித்தால் ஆண்டில் சுமார் 700 கோடி ரூபாய்கள் சேமிக்கப்படும்.

''இந்தக் கருத்தின் பிழிவாக அமைந்திருந் தது கடைசியாகப் பேசிய சிங்காரம் என்ற மாண வரின் பேச்சு. இந்தப் பேச்சு அறிவானந்தம் என்ற மாணவன் எழுதியது என்று எண்ணுகிறேன். ஏனென்றால், நேற்றுதான் அந்தப் பேச்சை அறி வானந்தம் என்ற மாணவனிடமிருந்து வாங்கி, முழுக்கப் படித்தேன். பாவம், தன் தாயார் மருத் துவமனையில் இருப்பதால் அந்த மாணவரால் பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டு பேச முடியாமல் போய்விட்டது.''

தலைவர் கடைசியாகக் கூறியதைக் கேட்ட போது சிங்காரத்தின் நண்பர்களும் அறிவானந் தம் நண்பர்களும் குசுகுசுவென தங்களுக் கிடை யே பேசிக் கொண்டார்கள்.

தலைவர் தொடர்ந்து பேசினார்:

''ஆனால், அந்தப் பேச்சு இந்த மாணவர் கைக்கு எப்படி வந்தது? ஒருவேளை அறிவானந் தமே இந்த மாணவரிடம் கொடுத்துப் பேசச் சொல்லியிருக்கலாம்.

''சிலர் சொல்வதுபோல் நடப்பதில்லை. ஆனால், ஒரு சிலர் அவ்வாறே வாழ்ந்து வெற்றி காண்கிறார்கள். இந்தப் பேச்சை எழுதிய அறிவா னந்தம் என்ற மாணவனின் வாழ்க்கையில் அண்மையில் ஒரு சம்பவம் நடைபெற்றது. அது மற்றவர்கட்கு ஒரு பாடமாக மட்டுமல்ல; வழி காட்டும் நிகழ்ச்சியாக இருக்கக் கூடியதாகும்.

''அறிவானந்தம் என்ற அந்த மாணவரின் தாயார் திடீரென நோய்வாய்ப்பட்டார். கொடிய நோயானதால் மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டார். அந்தக் குறிப்பிட்ட கொடிய நோய்க்கு மிகவும் விலையுயர்ந்த மருந்து தேவைப்பட்டது. அம் மருந்து அப்போது மருத் துவமனையில் இல்லை. வெளியில் உடனடியாக வாங்கிக் கொடுக்க வேண்டியிருந்தது. அவர் களோ ஏழை. ஏழைத் தாயின் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. இதைக் கேட்ட அறிவானந்தம் எனும் அந்த மாணவன் தான் பள்ளி சிறுசேமிப்பு வங்கியில் சிறுகச் சிறுகப் பணம் போட்டு

ஓரளவு சேர்த்து வைத்திருப்பதாகக் கூறினான். அதோடு, அந்தப் பணத்தைக் கொண்டு விலை யுயர்ந்த மருந்துகளை வாங்கியும் வந்தான். அவ னது தாயாரும் சாவின் பிடியிலிருந்து விடு பட்டார். அந்த மாணவரின் சிறிய சேமிப்பே அந்தத் தாயின் உயிரைக் காக்கும் சஞ்சீவியாக அமைந்தது.

''இந்த நிகழ்ச்சி மற்றவர்களுக்கு வழிகாட் டியாகவும் படிப்பினையாகவும் அமைய வேண் டும். அறிவானந்தம் என்ற அந்த மாணவரே இந்த ஆண்டின் 'சிறந்த சேமிப்பு மாணவர்' என்பதற்கான பரிசையும் பாராட்டையும் பெறு கிறார்!''

இதைக்கேட்ட மாணவர்களும் ஆசிரியர் களும் உற்சாக மிகுதியால் கைதட்டி மகிழ்ச்சி தெரிவித்தனர்.

கைதட்டல் ஒலி அடங்கியவுடன் தலைவர் மீண்டும் தன் பேச்சைத் தொடர்ந்தார்.

''அறிவானந்தம் தயாரித்த பேச்சே இன் றையப் பேச்சுப் போட்டியிலும் முதல் பரிசுக்கு உரியதாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறது!''

இதைக் கேட்டபோது எழுந்த கைதட்டல் ஒலி அடங்க நீண்ட நேரம் ஆகியது.

தலைவர் மேலும் தொடர்ந்தார்.

''இதற்கிடையே ஒரு வருந்தத்தக்க நிகழ்ச் சியைக் குறிப்பிட வேண்டியுள்ளது. இதை அறி விக்குமாறு தலைமையாசிரியர் என்னைக் கேட் டுக் கொண்டுள்ளார்.''

இவ்வாறு தலைவர் கூறியவுடன் கூட்டத் தில் ஒரு விநாடி அமைதி நிலவியது. என்னவாக இருக்கும் என்ற திகைப்பு எல்லோர் முகத்திலும் தென்பட்டது. மர்மத்தைத் துலக்கும் வகையில் தலைவர் தொடர்ந்து பேசினார்.

''சிறந்த சேமிப்பாளன் என்பதற்கான பரி சைப் பெற ஒரு மாணவன் குறுக்கு வழியில் முயற்சி செய்திருக்கிறான். ஆண்டு முழுவதும் சேமிக்க முயலாத அந்த மாணவன் நேற்று திடீ ரென ஒரு பெருந் தொகையைக் கொண்டு வந்து பள்ளிச் சேமிப்பு வங்கியில் கட்டியுள்ளான். சந்தேகப்பட்ட ஆசிரியர், அப் பையனின் தந்தை யைக் கண்டு கேட்டார். அப்போதுதான் மேற்கூ றிய உண்மை வெளிப்பட்டது.

''சிறந்த சேமிப்பாளன் என்ற பரிசைப் பெற வேண்டும் என்ற வெறித்தனமான ஆசை ஏற்பட்டிருக்கிறது. இதற்காகத் தன் தந்தை ஒரு முக்கிய அவசர செலவுக்காக வைத்திருந்த பணத்தை அந்த மாணவன் திருடியிருக்கிறான். அதைக் கொண்டு வந்து பள்ளிச் சிறுசேமிப்பு வங்கியில் கட்டியிருக்கிறான். இதனால் குறிப்பிட்ட அவசர செலவுக்குப் பயன்படுத்த இயலாது அவனது தந்தை மிகவும் பாதிக்கப்பட்டுவிட்டார். இதனால், சேமிப்பினால் நன்மை ஏற்படுவதற்கு நேர்மாறான முறையில் பாதகம் ஏற்படும்படியாகிவிட்டது. இதற்குக் காரணமான அந்த மாணவன் கடுமையாகக் கண்டிக்கவும் தண்டிக்கவும் பட வேண்டியவன் என்பதில் ஐயமில்லை.

தலைவரின் பேச்சு சிங்காரத்தை உலுக்கி விட்டது. பயத்தால் வியர்த்துக் கொட்டியது. அடுத்து தனக்கு என்ன அவமானம் நேரப் போகிறதோ எனக் கண்கலங்கியபடி கூனிக்குறுகி அமர்ந்திருந்தான்.

மீண்டும் தலைவர் தொடர்ந்தார் :

''நேர்மையான முறையில் வீண் செலவைக் குறைத்துச் சேமித்தால் பெரும்பயன் பெற முடியும் என்பதற்கு உதாரணமாக அமைந்த அறிவா

னந்தம் என்ற அந்த மாணவருக்கு என் பாராட்டு தல்கள். அதோடு, உங்கள் அனைவருடைய வாழ்த்துக்களையும் அந்த மாணவருக்குத் தெரி வித்துக் கொள்கிறேன்.''

தலைவர் தன் பேச்சை முடித்தபோது அரங் கமே அதிரும் வகையில் கையொலி எழுந்தது. அறிவானந்தத்தின் பெருமை மாணவர்களிடை யே வானளாவ உயர்ந்தது. அவன் நெருங்கிய நண்பன் முருகு, தன் நண்பனின் பெருமையை யும் சிறப்பையும் எண்ணிப் பெருமிதமடைந் தான். இந்தப் பாராட்டும் பரிசும் தனக்கே கிடைத்ததாக எண்ணி மகிழ்ந்தான். இந்தச் சந்தோஷச் செய்தியை உடனடியாக அறிவானந் தத்துக்குத் தெரிவிக்க விரும்பினான். மருத்துவ மனை நோக்கி ஓடினான்.

அதே சமயத்தில், தான் செய்த தவறுகளுக் கெல்லாம் சரியான தண்டனை கிடைத்துவிட்ட தாகச் சிங்காரம் கருதினான். தன் மாணவ நண்பர் களின் முகத்தை ஏறிட்டுப் பார்க்கவே கூசினான்.

தலைவர் தன்னை நேரடியாக மாணவர்கள் மத்தியில் காட்டிக் கொடுக்க வில்லைதான். ஆனால் தான் தவறு செய்தவன் என்பதை அவன் மனச்சாட்சி காட்டிக் கொடுக்கவே செய்தது. அறி வானந்தம் எழுதிய பேச்சுக்காகத் தனக்குப் பரிசு

கிடைத்தது என்னவோ உண்மை! ஆனால், அதைத் தொட தனக்கு உரிமையும் தகுதியும் இல்லை என்பதை உணர்ந்தான். இதற்கெல்லாம் ஒரே பரிகாரம்தான் உண்டு. அறிவானந்தத்தை நேரில் கண்டு இப்பரிசை அவனிடம் தந்து மன்னிப்புக் கேட்பதுதான் அது.

இப்படி ஒரு முடிவுக்கு வந்த சிங்காரம் மருத்துவமனை நோக்கி விரைந்தான்.

மருத்துவமனை வராந்தாவில் அறிவானந் தமும் முருகும் பேசிக் கொண்டிருந்தார்கள். இரு வர் முகத்திலும் மகிழ்ச்சி பொங்கியது. முருகு சொன்ன சில செய்திகளைக் கேட்டபோது அறி வானந்தத்தின் முகத்தில் மகிழ்ச்சியும் வருத் தமும் மாறி மாறி தோன்றியது.

அதற்குள் அங்கு வந்து சேர்ந்தான் சிங் காரம். அவன் கைகளில் பேச்சுப் போட்டியில் கிடைத்தப் பரிசுப் புத்தகங்கள் இருந்தன. கண்களில் நீர் நிறைந்திருந்தது. தயங்கித் தயங்கி அறிவானந்தத்தை அணுகினான். சிங்காரத்தைக் கண்ட அறிவானந்தம் ஓடிவந்து அவன் கை களைப் பற்றிக் கொண்டான். பரிசு பெற்றதற்குப் பாராட்டுத் தெரிவித்தான். சற்றும் எதிர்பாராத இந்நிகழ்ச்சியால் சிங்காரம் நெகிழ்ந்து போ னான். அவன் கண்கள் நீரைச் சொறிந்தன. எதிரி

யையும் பாராட்டும் அறிவானந்தத்தின் உயர்ந்த மனநிலையை எண்ணி வியந்தான். பேசும்போது அவன் குரல் தழதழத்தது.

''அறிவானந்தம்! உன் உயர்வைப் புரிஞ்சுக் காம இருந்துட்டேன். உன்னிடம் குரோத மனப் பான்மையோட நடந்துக்கிட்டேன். அதுக்கு இப்போ மன்னிப்புக் கேட்டுக்கறேன். உனக்குப் பரிசு கிடைக்கக் கூடாது; நானே பரிசு பெறணும்'கிற பேராசையிலே குறுக்கு வழியில் நடந்துட்டேன். அப்பாவோட பணத்தைத் திரு டினேன். எழுதி வச்சிருந்த பேச்சுக் கட்டுரையை உனக்குத் தெரியாமல் களவாடினேன். அதை மனப்பாடம் செய்து, என் சொந்தப் பேச்சைப் போலப் பேசிப் பரிசு வாங்க மோசடியா நடந்தேன். 'உண்மை ரொம்ப நாள் தூங்காது'ங்கி றது முழுக்க முழுக்க உண்மையாயிடிச்சு! எல்லா உண்மைகளும் வெளியாயிடுச்சு! மத்தவங்க மத்தியிலே அவமானச் சின்னமா நிற்கிறேன்.''

தான் செய்த தவறுக்கெல்லாம் மனம் வருந்தி நின்றான் சிங்காரம். அவன் கண்கள் நீரைப் பொழிந்தன. அதைக் கண்ட அறிவா னந்தம் மிகவும் இளகிப் போனான். அவனுக்கு என்ன ஆறுதல் கூறித் தேற்றுவது எனத் தெரி யாமல் தடுமாறினான்.

''என்ன, சிங்காரம்! ஏன் வீணா அழறே? தவறை உணர்றவங்களை இறைவன் உடனே மன்னிச்சுடறான்'னு நம்ம ஆசிரியர் அடிக்கடி சொல்வார், இல்லையா?''

சிங்காரத்தை தேற்ற முயன்றான் அறிவா னந்தம்.

''அறிவானந்தம்! கடவுள் மன்னிப்போட உன் மன்னிப்பும் வேண்டும்! அதை வேண்டித் தான் வந்திருக்கேன்!''

மனம் திறந்து உருக்கமுடன் கூறினான் சிங் காரம். அவனிடம் ஏற்பட்டுள்ள பெரும் மாற்ற மும் பேச்சும் அறிவானந்தத்தையும் முருகுவை யும் கண்கலங்க வைத்துவிட்டன. அறிவானந்தம் நெகிழ்ந்த மனதுடன் பேசினான்.

''என்னைப் பொருத்தவரை நீ ஒண்ணும் அப்படி பெரிய தவறு பண்ணிடலே, எப்படியா வது, எதிலாவது பரிசும் பாராட்டும் வாங் கணும்'னு நீ ஆசைப்பட்டது ரொம்பவும் நியாய மானதுதான். ஆனால், அதிலே வெற்றி பெற நீ கடைப்பிடிச்ச குறுக்கு வழிதான் எனக்கு வேத னையை உண்டாக்கிடுச்சு. நேரான வழியிலே தகுதியும் திறமையும் வளர்த்துக் கொள்ளணும்.

அப்போ, எல்லாப் பரிசுகளும் பாராட்டுகளும் நம்மைத்தேடி தானாகவே வரும். எருப் போட்ட நிலம்தானே நன்றாக விளைய முடியும்?''

அறிவானந்தத்தின் பேச்சும் செயலும் தனது தவறுகளைக் காரண காரியத்தோடு உணரச் செய்வதாகச் சிங்காரம் உணர்ந்தான். இவ்வளவு நற்குணமுள்ள திறமைசாலியை இது நாள் வரை வெறுப்போடு பார்த்தது எவ்வளவு பெரிய நட்டம் என்று உணர்ந்தான். இதற்காக வருந்தினான். அவனுக்கு நேராகப் பரிசுப் புத்தகங்களை எடுத்து நீட்டினான்.

''இந்தா அறிவானந்தம்! உன் பேச்சுக் கட்டுரையை மனப்பாடம் செய்து பேசிய பேச்சுக்குக் கிடைத்த பரிசுப் புத்தகங்கள். இதைத் தொடக் கூட எனக்குத் தகுதி இல்லை. இவைகள் உனக்குத்தான் சொந்தம்'' என்று சொல்லியவாறே பரிசு நூல்களை அறிவானந்தத்திடம் கொடுக்க முயன்றான். ஆயினும், அவற்றைப் பெற்றுக் கொள்ள அறிவானந்தம் விரும்பவில்லை.

''பேச்சை எழுதினது நானாக இருந்தாலும் அதை அழகாகப் பேசியது நீதானே. ஆகவே,

அது உனக்குத்தான் சொந்தம்! மேலும், நீ முழுக்கத் திருந்திய இந்த நல்ல நாளின் நினைவாக, எனது அன்புப் பரிசாக இந்தப் பரிசு புத்தகங்களை உனக்குத் தர்றேன்! நீயே வச்சுக்கோ! என்று கூறியபடியே பரிசு நூல்களை சிங்காரத்தின் கைகளிலேயே திணித்தான்.

அறிவானந்தத்தின் பெரிய மனதையும் உயர்ந்த எண்ணங்களையும் எண்ணி சிங்காரம் மகிழ்ந்தான். சிறந்த நண்பனை இதுவரை இழந்திருந்ததற்காக மிகவும் வருந்தினான். இனிமேலாவது அறிவானந்தத்தோடு இணைந்திருக்க ஆசைப்பட்டான். அவன் துணையோடு தன் திறமைகளை வளர்த்துக் கொள்ள விரும்பினான். பலரும் பாராட்டும் வகையில் நற்குணங்களோடு விளங்க உறுதி கொண்டான். இதற்கு அறிகுறியாக வாஞ்சையோடு அறிவானந்தத்தின் இரு கைகளையும் இறுகப் பற்றிப் பிடித்தான்.

☆ ☆ ☆



நூலாசிரியர்

வளர்தமிழ்ச் செல்வர்

**மணவை முஸ்தபா**

சென்னை அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் பட்டம் பெற்ற வளர்தமிழ்ச் செல்வர், கலைமாமணி மணவை முஸ்தபா,சர்வதேசத் தமிழ்த் திங்களிதழான 'யுனெஸ்கோ கூரியர்' ஆசிரியராவார்.

காலம் தேடும், தமிழ், மருத்துவக் கலைச் சொல் களைஞ்சியம், 'இளைஞர் இஸ்லாமியக் கலைக் களஞ்சியம்' உட்பட நாற்பது தமிழ் நூல்களை எழுதியுள்ளார். ஆங்கிலத்திலிருந்து எட்டு நூல்களையும், மலையாளத்திலிருந்து ஏழு நூல்களையும் மொழி பெயர்த்துள்ளார். எட்டு தொகுப்பு நூல்களும் வெளி வந்துள்ளன. ஐந்து சிறுவர் இலக்கியங் களையும் படைத்துள்ளார்.

தென் மொழிகள் புத்தக நிறுவனத்துக்காக நாற்பத்தி மூன்று சிறுவர் நூல்களைப் பதிப்பித்துள்ளார். அவை புதினம், சிறுகதை, நாடகம், அறிவியல், சுற்றுலா பற்றிய பல்துறைப் படைப்புகளாகும். கடந்த இருபது ஆண்டுகளாக வானொலியில் சிறுவர் நிகழ்ச்சிகள் பலவற்றை எழுதியுள்ளார். சென்னை வானொலி நிலைய சிறுவர் நாடக விழாக்களில் இவரது நாடகங்கள் பல ஒலிபரப்பாகி, பாராட்டப்பட்டுள்ளன. இவரது கலை, இலக்கியப் பணியைப் பாராட்டி தமிழ் நாடு அரசின் இயல், இசை, நாடக மன்றம் 1986இல் கலைமாமணி விருதளித்துப் பாராட்டியது. இவரது அறிவியல் தமிழ்ப் பணியைப் போற்றி தமிழ்நாடு அரசு திரு.வி.க. விருதை 1989இல் வழங்கியது. இவரது தமிழ்ப் பணியைப் பாராட்டி ஆழ்வார்கள் ஆய்வு மையம் எம்.ஜி.ஆர். விருது வழங்கியது.